552

553
3-53

REGISTERED No. M. 6165. அணு. 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
28 JUL 1955

மாத பத்திரிகை

## ஆகஸ்டு 1955.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| சமூகத்தின் வாழ்வும், தாழ்வும் ... ... ... ... | 1 |
| திருநபிக் காதலர் ஹஜ்ரத் பிலாலின் தியாகச் சம்பவம் (டி. எப். ஆர். ம.ஆலி ஸாஹிப் பாகவி) ... ... | 7 |
| திருக் குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... | 13 |
| ...ர்னம் (தொடர் கதை) ... ... ... | 17 |
| ... சர்ச்சில்" (முஹம்மது தாவூது) | 27 |

...இஸ்லாம் ஆபீஸ் :
...ஹரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

JL
...M24 FR
N55
187045

# பத்ஹுல் இஸ்லாம்.

**சந்தா விபரம்:** இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1-8-0 |
| தனிப் பிரதி | அணா. | 0-2-0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2-0-0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

## மிப்தாஹுல் ஸுபுஹானி பீ தர்ஜுமத்தி மஜ்மூஉஸ் ஸுல்தானி

இந்த கித்தாபாகிறது ஹனபி மதுஹபுக்கும் ஷாபிஈ மதுஹபுக்கும் அவசியமாகிய நூதனமான ஹுக்முகளைப் பொதிந்த பிக்ஹு மஸ்அலாக்களாகும். அதினின்றும் ஒவ்வொரு ஹுக்மையும் சகல ஜனங்களும் இலகுவா யறியும் பொருட்டு ஸுவாலும் ஜவாபுமாக சேகரிக்கப்பட்டிருக்கிறது. இது சுல்தான் மஹ்மூது கஸ்னவி றஹிமஹுல்லாஹு அவர்களால் தங்களுடைய காலத்தில் உள்ள அநேக உலமாக்களின் உதவியால் சேகரிக்கப்பட்டு பார்ஸீ பாஷையிலும் உர்து பாஷையிலும் அருமையாய் விளங்கி வந்ததை நம்மவருக்கு உபயோகமாகும்படி தமிழிலும் அரபுத் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

கிரயம் சுத்தத் தமிழ் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு ரூ. 2-6-0

ஷை அறபுத் தமிழ் வெள்ளை காகிதம் கலிகோ பைண்டு ரூ. 5-0-0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

فتح الاسلام

# ‘பத்ஹுல் இஸ்லாம்’

ஆகஸ்டு—1955.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1955
MADRAS

## சமூகத்தின் வாழ்வும் தாழ்வும்.

உலகத்தின் எந்த ஒரு சமூகமும், அது தன் சொந்த வழக்காசாரத்திலும், ஒழுக்கத்திலும் பண்பு முறையிலும் நிலைத்திருக்கும் வரைக்கும், அந்த சமூகத்துக்கு சீரழிவோ குறைபாடோ ஏற்படவே மாட்டாது. ஆதிகாலந்தொட்டு பிந்திய காலம் வரை, லோக சரித்திரத்தையும் நிகழ்ச்சிகளையும் பார்வையிடுங்கால் இந்த உண்மையை தெள்ளத் தெளிய உணரலாம்.

மனித சமூகத்தை நல்லொழுக்கத்தில் நிலைநிறுத்தி வைத்து சமூகத்தை மேன்மையுடன் வாழும் வழிகளைக்கற்பித்துக் கொடுக்கும் சீரிய நோக்கத்தோடு அந்த ஆதிகாலந்தொட்டே, ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சமூகத்துக்காக வென்று, எல்லாம் வல்ல இறைவன், அவ்வப்போது நபிமார்களையும் ரஸூல்மார்களையும் தீர்க்கதரிசிகளையும் அனுப்பி வைத்துள்ளான்.

அங்ஙனம் தெய்வத்தின் பிரதிநிதியாக தூது கொண்டு போதித்து மாந்தர் கோடியை, சன்மார்க்க நல்லொழுக்கத்துக்கு அழைத்த நபிமார்களும் ரஸூல்மார்களும் அடைந்த அல்லல்களுக்கும் பட்ட கஷ்டங்களுக்கும் அளவு சொல்லி முடியாது. மூர்க்க சுபாவமுள்ள மூடமக்கள், தங்கள் ஆத்மார்த்த வழிகாட்டிகளாகிய நபிமார்களையே

கொன்று போடவும் பின் வாங்கவில்லை; தூக்கில் ஏற்றவும் தயங்கவில்லை.

பண்டைபோது தோன்றிய சமூகத்தினர், அவர்கள் காலத்து நபிமார்களுக்கு பலவழிகளிலும் இடையூறு விளைவித்து வந்தார்கள். இவர்களின் கொடுமைகளுக்கு ஆளான நபிமார்களில் ஒரு சிலர் சகித்துக் கொண்டு மாண்டு மடித்து தங்கள் தோற்றத்தின் சத்திய இலக்ஷியத்தை உலகுக்கு எண்பித்து நிலை காட்டிச் சென்றனர். ஆயினும் அங்ஙனம் துன்பப்பட நேரிட்ட நபிமார்களில் ஒரு சிலர், இம்சை பொறுக்கொணுமல் தங்கள் சமூக மக்களையே கோபித்து சபித்து விட்டுப் போனுர்கள்.

இங்ஙனம், மனித ஜாதியினரில் ஒரு சாரார், தெய்வக்கட்டளைக்கும் பணியாமல், தீர்க்கதரிசிகளின் போதனைகளுக்கும் இணங்காமல், மனச்சாக்ஷிக்கும் கட்டுப்படாமல், அவிழ்த்து விடப்பட்ட ஒட்டகங்களைப் போலும், கடிவாள மிடப்படாத காட்டுக் குதிரைகளைப் போலும், தான் தோன்றித் தனமாக சீர்கெட்டுப் போய்விடவே, தெய்வமும் அவர்கள் மீது தன் மகா கோபத்தைக் காட்டி, உலகப் படிப்பினைக்காக தண்டிக்க வேண்டிய காரணமும் ஏற்பட்டது.

உதாரணம்:—பனிஇஸ்ராயீல் என்னும் இஸ்ரவேல் கூட்டத்தார் பன்னெடுங்காலத்துக்கு முன்னரே, இங்ஙனம் தான்தோன்றித் தனமாக, தங்கள் காலத்து நபிமார்களுக்கு விரோதமாக நடந்து கொள்ளலாயினர். அக்காலை, சனிக்கிழமை தோறும் மக்கள் சமூகத்தினர் தேவாலயத்து வந்து கூடி தெய்வ வழிப்பாடு செய்யவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தனர். அன்றையதினம், இறைவனுக்காக விடுமுறை அனுஷ்டிக்க வேண்டுமென்றும், வேட்டையாடல், மீன் பிடித்தல் கேளிக்கை புரிதல் முதலிய காரியங்களில் உழலக் கூடாதென்றும் கட்டளை யிடப்பட்டிருந்தனர். ஆயினும் அந்த ஊதாரித்தனமுள்ள ஜனங்கள், இறைவன் கட்டளையையும் நபியின் போதனையையும் புறம்பே தட்டிப்போட்டு விட்டு, புனித நாளாகிய சனிக்கிழமையன்று மீன் வேட்டையாடப் போய்விட்டனர். சிலர் வீண்காரியங்களில் ஈடுபட்டுமென்றனர்.

இதன் காரணமாக, அந்த தாவூத் நபி காலத்து ஜனங்களில் பலர், நபியுடைய சாபத்துக்கும் இறைவனுடைய கோபத்துக்கும்

187045

ஆளாகி குரங்குகளாக உருமாற்றப்பட்டுப் போனார்கள். அந்தோ பரிதாபம்.

(குறிப்பு:—இக்காலத்தில் ஒரு சிலர், குரங்கிலிருந்து மனிதன் உற்பத்தியானனா? மனிதரிலிருந்து குரங்கு உற்பத்தியாயிற்றா? என்று ஆராய்ச்சி செய்கிறார்கள். உண்மையில், மனிதன் தன் குணபூஷணமும் மானுஷ்யத் தன்மையு யாகிய "இன்ஸானியத்"தை இழந்து விடுங்கால், அவன் மிருகத்தன்மை யாகிய "ஹைவானியத்"தை அடைந்து விடுகிறான். எனவே, மனிதனிலிருந்து குரங்கு உண்டாவதென்பது அசாதாரணமல்ல. அத்துடன் இக்காலே, சில குரங்குகள் மனிதன் செய்யும் சில பல காரியங்களை அபினயம் பண்ணி செய்வதால், மனிதன் அந்தக் குரங்கைப் பார்த்து ஆச்சரியப்பட்டு வேடிக்கை பார்க்கிற நேரமும் வந்திருக்கிறது.)

மூஸா அலைஹிஸ்ஸலாம் காலத்து ஜனங்களும் இப்படித்தான் தங்கள் நபிமார்களுடைய போதனைக்கு விரோதமாக நடந்து கொண்டனர். 'அமாலிகா' என்ற அதிக்கிரமக் கூட்டத்தாருடன் போரிடுமாறு ஆண்டவன் கட்டளையிட்டிருந்தான். அந்தப்போராட்டப் படையில் வந்து சேருமாறும் தமக்குத் துணை புரியுமாறும் மூஸா நபி வேண்டிக் கொண்டார்கள். அதற்கந்தக் கூட்டத்தார், "ஏ நபியே, நீயும் உன் இறைவனும் மட்டும் போய் சண்டைபோடுங்கள்; நாங்கள் இங்கேயே உட்கார்ந்திருந்து வேடிக்கை பார்க்கின்றோம்" என்று கூறி விதண்டாவாதம் பேசினார்கள்.

இதனால் மூஸா நபியின் சமூகத்தினரும், நபியின் சாபத்துக்கும் ஆண்டவனின் கோபத்துக்கும் ஆளானார்கள். இங்ஙனம் அக்கூட்டத்தார் சீரிழிவுற்று நாடிழந்து நகரிழந்து இருக்க இடமின்றி நிற்க நிழலின்றி நாற்பது வருஷ காலம் அல்லோல கல்லோலப்பட்டு அகில மெங்கும் அலைந்து திரிந்தார்கள்.

லூத் அலைஹிஸ்ஸலாம் என்ற நபியின் கூட்டத்தாரோ உலகத்திலேயே மிக ஆபாசமான ஜாதியாய் உழன்றார்கள். அன்னோர், மானுஷ்ய இயற்கைத் தன்மையை மீறி, தகாத காரியங்களில் ஈடுபட்டு உழன்றனர். இயற்கையாகிய ஆண் பெண் சேர்க்கை ஒழுக்கத்தை விட்டு, ஆண்—ஆண் சேர்க்கையில் பெரும்பாலோர் ஈடுபட்டுக் கெட்டுழன்றார்கள். அந்த நல்ல நபி, எவ்வளவோ நன்மொழி

களைக் கூறி நல்வழி படுத்தப் பார்த்தார். ஆனால் அந்த மூர்க்கக் கூட்டத்தார், கேட்கவும் இல்லை; தங்கள் பாபச் செயல்களை விட்டொழிக்கவு மில்லை. எனவே, நபியின் சாபத்துக்கும் இறைவனின் கோபத்துக்கும் ஆளாய் அழிந்தனர். இறைவன் தன் மகா சக்தியினால் அக்கூட்டத்தார் வசித்த ஊரையே கிளப்பி அடியோடு கவிழ்த்து, எல்லோரையும் நாசமாக்கி விட்டான்.

இவ்வாறே நம்ரூத், ஷத்தாத், பிர்அவுன் போன்ற மூர்க்க வேந்தர்கள் ஆண்டு ஆணவம் புரிந்து அழிந்து போன கதைகளை விவிலிய வேதமும், திருக் குர்ஆனும் சரித்திர ஏடுகளும் எடுத்தோதுகின்றன. ஒரு சமூகம்-ஒரு கூட்டம்-ஒரு ஜாதியினர் என்ன தான் சுகபோக செல்வம் உடையவர்களாக இருந்த போதிலும், என்ன தான் ஆட்சித் திறமையில் வலிமையாளர்களா யிருந்த போதிலும், என்ன தான் அறிவாற்றல் மிக்க கலா நிபுணத்துவம் வாய்ந்தவர்களாயிருந்த போதிலும் சரியே, அவர்கள் இறைவன் கட்டளைப் படியும் மகான்களின் போதனைப் படியும், சத்திய சன்மார்க்கத்தின் சீரிய வழிப்படியும் நடந்து கொள்ளாது தான்தோன்றித் தனமாய் உழன்று பாபச் செயல்களில் மூழ்கிப் போவார்களாயின், இறுதியில் இவர்களுக்கும் அந்தப் பண்டைக்காலப் பாபிக் குழாத்தினருக்கு நேர்ந்த கதிதான் நேரிடும் என்பதற்குச் சரித்திரமே போதிய சான்றாகும்.

இன்னல்லாஹ லா யுகய்யிரு மாபி கவ்மின்,
ஹத்தா யுகய்யிரூ மா பி அன்புஸிஹிம்

"எந்த ஒரு சமூகமும் தனக்குத் தானே (கேடான) மாறுதலைத் தன்னில் (சுயமே) உண்டாக்கிக் கொள்ளாத வரை, அல்லாஹுதஆலா, ஒரு போதும் (அந்த) எந்த சமூகத்தையும் (மாறுபடுத்தி) கேடுறச் செய்வதில்லை." (திருக்குர்ஆன்)

இந்தத் திருவாக்கியம் ஆழ்ந்த கருத்தையும் விழுமிய தத்துவத்தையும் கொண்டதா யிருக்கிறது. எந்த சமூகத்துடைய வாழ்வு-தாழ்வுக்கும் எந்த ஜாதியினரின் வாழ்வு—தாழ்வுக்கும் இந்த முதுமொழி மிக மிகப் பொருந்தியதாகும்.

பரிசுத்த தீனுல் இஸ்லாம் எல்லா காலத்திற்கும் எல்லா சமூகத்திற்கும் எல்லா நாட்டினருக்கும் பொதுவானதாகும். எல்லோருக்கும் ஏற்ற முறையில் அதன் அனுஷ்டான திட்டங்கள் அமைந்திருக்கின்றன. மனித சமூகத்தின் முன்னேற்றத்துக்கும் சுபீக்ஷத்துக்கும் இஸ்லாம் மார்க்கமே ஏற்றமைந்ததா யிருக்கிறது.

இன்று முஸ்லிம்களில் ஒரு சாரார் க்ஷீணதசை யடைந்துபோ யிருப்பதாக கூறப்படுகிறது. ஆம்! ஜன பலத்திலும், பொருள் பலத்திலும், ஆக்ஷி பாரத்திலும் நம்மனோர் இன்று க்ஷீணதசை தான் அடைந்திருக்கின்றனர்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் காலத்து முஸ்லிம்கள், அரசர்களா யிருக்கவில்லை; ஆஸ்தி பூஸ்திதி யுடையவர்களாய் இருக்கவில்லை. ஆனால் உலக மெல்லாம் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். இதற்குக் காரணம், அவர்கள் தங்கள் இறைவனின் கட்டளையை சிரமேற் கொண்டொழுகினர்; தங்கள் திரு நபி (ஸல்) அவர்களின் போதனையை உயிரினும் பெரிதாய் மதித்தனர். நற்குண நல்லொழுக்கத்தில் மிக மிகச் சிறந்திருந்தனர். ஆதலால் அவர்கள் உயர்ந்த சமூகமாய்-உந்நத உம்மத்தாய் விளங்கினர்.

இன்றைய முஸ்லிம்களின் நிலையை, சற்று அந்த புராதனப் முஸ்லிம்களின் நிலைமையுடன் ஒத்திட்டுப் பார்ப்போமாயின், நம்மனோரின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் காரணம் என்ன வென்று எளிதில் புரிந்து கொள்ளலாம். அவரவர் சத் ஒழுக்க குணநலம் தான் அவரவர் உயர்வுக்குக் காரணமாகும். முஸ்லிம் சோதரீர், சிந்திப்பீர்களாக. வஸ்ஸலாம்.

# காஜா முயீனுத்தீன் சிஷ்தீ அஜ்மீரி (ரலி) அவர்களின் ஜீவிய சரித்திரம்

இதில் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரலி) அவர்கள் அவதரித்ததும், இளம் வயதிலேயே இபுறூஹீம் கந்தூஸி என்னும் மஹானை சந்தித்து அதனால் அவர்கள் மனம் மஃரிபத் ஒளிவால் நிறப்ப மடைந்ததும் பின்னர் காஜா உஸ்மான் ஹாரூனி (ரஹ்) அவர்களிடம் சென்று உபதேசம் பெற்றதும் பின்பு மக்கத்துக்குச் சென்றதும், பின் பக்தாத் ஷரீப் வந்து ஹஸ்ரத் கவ்துல் அஃலம் (கத்த) அவர்கள் சமுகத்தி லிருந்ததும், பஷர்வார் நகருக்குப் போய் ஒரு துர்க் குணமுள்ள கொடியனை நல்வழியிலாக்கினதும், பின்பு பலக் எனும் ஊரில், தஸவ்வுப் என்னும் மெஞ்ஞானத்தில் விசு வாச மில்லாத ஒரு வைத்தியரின் உள்ளத்தில் மஃரிபத் என்னும் மெய்ஞான ஒளி பிரகாசிக்க செய்ததும், தீப்பூசகர் களை இஸ்லாத்திலாக்கினதும் காபிரான ஒரு கொள்ளைக் கூட்டத்தை இஸ்லாமைத் தழுவச் செய்ததும், பிறகு மதீனு ஷரீபுக்குப் போய் ஸியாரத்து செய்ததும், அங்கிருந்து நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உத்திரவுபடி அஜ்மீர் வந்ததும், அங்கே நடத்திய காராமத்துகளும், அவர்களின் திருமணமும் அவ்லாதுகளும், அவர்கள் வபாத்தும் விபரித் துள்ளன. இம்மஹானின் சரிதையை ஒவ்வொருவரும் வாசித் தறிய வேண்டியது அத்தியாவசியம். இதன் விலை அணா. 8

மேற்படி அறபியில் காஜா முயீனுத்தீன் சிஷ்தி அவர் களின் "அதாஹிர் ரஸூல்" என்னும் மௌலூது.

விலை ரூ. 1—4—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20 ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(உர்து கவிதை)

# திருநபிக் காதலர் ஹஜ்ரத் பிலாலின் தியாகச் சம்பவம்

தமிழாக்கம்:—டி. எப். ஆர் மஆலி சாஹிப் (பாகவி)

உண்மைக் காதலராகிய பிலாலுடைய வரலாறென்றைக் கூறுகிறேன். கேளுங்கள்: இந்தச் சம்பவமானது அவரது மரணத்தையொட்டியதாகும், பக்தர்களே! பிலாலுக்கு நபிகள் பெருமானாரிடம் எத்தகைய காதல் (அபிமானம்) இருந்த தென்றால்—புல்புல் பட்சிக்குப் புஷ்பத்தினிடம் இருப்பது போன்ற பற்று இருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அல்லாஹ்விடம்போய்ச் சேர்ந்து விட்டார்களே அப்போது ஹஜ்ரத் பிலால், எம்பெருமானாருடைய வியாகுலத்தால் பைத்தியம் பிடித்தவரானார். ஹஜ்ரத் பிலாலுடைய நிலை மற்றோரைக் காட்டினும் தனிப்பட்டதாகி விட்டது.

எம்மட்டும் சுய உணர்ச்சியும் சுவாதீனமும் இழந்து விட்டார் என்றால, சிறப்பான அஹ்மத் நபிக்காக அல்லும் பகலும் அழுது கொண்டே இருந்தார். எம்பெருமானாரின் தரிசனத்துக்காக அவரது கண்கள் துடித்துக் கொண்டிருந்தன.

மதீனா நகரில் அவர் எங்கெங்கத் தெரு வழியாகப் போன போதிலும், அவருடைய பார்வை நபிபெருமானார் அஹ்மதின் ரவ்லாவின் மீதே எழுவதாய் இருந்தது. அவர், தன்னுடைய தேகஸ்திதியை முற்றும் மறந்தவராக இருந்துவந்தார். அவர் உள்ளம் பதறிக் கொண்டும், கண்கள் நீர் வடித்துக் கொண்டும் இருந்தன.

அல்லாஹ்வுடைய திருத்தூதரின் பெயரைச் சொல்லி, மயங்கி மயங்கி விழுந்து கொண்டிருந்தார். காலையும் மாலையும், பிலாலுடைய நிலை மதீனா நகரில் இம்மாதிரியாக இருந்து வந்தது. பிறகு உள்ளத்தின் அமைதியின்மை அளவுக்கு மீறிப் போய்விட்டது. அவரது தேகவாழ்வு, கால் தொடுத்து சிரசுவரை எங்கும் சீரழிந்துகொண்டிருந்தது. கவலையாலும் வியசனத்தாலும் நிலைமை மிகமிகக் கெட்டுப் போயிருந்தது. மதீனாவின் ஒவ்வொரு மூலைமுடுக்கும் அவரது மனதை வாட்டி வதக்கிக் கொண்டிருந்தன. வாழ்வே நெருக்கடியாய் விட்ட அளவில் அவருக்கு வெறி ஏறிவிட்டது. எனவே அவர் தோள் மீது கம்பளத்தைப் போட்டுக்கொண்டு மதீனாவைவிட்டு புறப்பட்டு விட்டார்.

இவ்வாறு பிலாலுடைய நிலை பெரிதும் சீர்கெட்டு விட்டது. பின்னர் ஹஜ்ரத் பிலால், மதீனா பிரதேசத்தை விட்டு ஷாம் (சிரியா) தேசத்துப் பக்கம் போகலானார். அவர் ஷாம் தேசத்தில் போய்ச்

சேர்ந்து அலையத் தொடங்கியதும் மின்சார வேகம்போல், இந்த சமாச்சாரம் ஜனங்களிடையே பரவிப் போய்விட்டது. உள்ளம் கரிந்துப்போன ஒருவர் இந்த ஊருக்குள் பிரவேசித்திருக்கிறார்.

எவரையோ நினைந்து உருகிக்கொண்டு, அவர் நிம்மதியின்றி இரவும் பகலும் கிடக்கிறார். அவருக்கு வயிற்றுக்கு உணவு வேண்டு மென்ற விசாரமில்லை; தூக்கம் வேண்டு மென்ற கவலையும் இல்லை. எப்போது பார்த்தாலும் புலம்பிக்கொண்டிருப்பதே அவரது ஜோலி யாக இருக்கிறது. "பாவம், அவரை யாராவது துன்புறுத்தி இருக்க வேண்டும்" என்று ஒருவன் பரிந்துப்பேசுகிறான். "அவர் எதையோ இழந்து விட்டார் போலிக்கிறது" என்றுவேறு ஒருவன் சொல்கிறான்.

"இவர் எங்கிருந்து வருகிறார் என்று கேளப்பா" என்று ஒருவன் சொல்லலானான். இப்படியாக நாலாபுறத்தி லிருந்து அங்கு ஜனங்கள் வந்து கூடிக்கொண்டு, அந்தத் திருநபி தாஸரிடம் அணுகி இவ்வாறு கேட்கலானார்கள்:—

"ஐயா கனவானே, உமது வீடு எந்த ஊரில் இருக்கிறது? சொல் வீராக! இப்படி, எப்போது பார்த்தாலும் கண்ணீரும் கம்பலையுமாய் இருக்கிறீரே யாருக்காக! ஊர்ஊராய் திரிந்து அலைகிறீரே, எந்தப் பொருளை தேடிக்கொண்டோ! ஐயா, கனவானே, உமது கோரிக்கை தான் என்ன, சொல்வீரா! இங்கு எதற்காக வந்தீர்? இங்கென்ன வேலை உமக்கு. ஓ கனவானே! யாருக்காக நீர் அழுதுகொண்டிருக்கி றீர்! அவரது பெயர் யாதோ?"

இப்படிச் சொன்னதை யெல்லாம், பிலால் தலைகுனிந்து கேட்டுக் கொண்டிருந்தார். ஜனங்கள், நிர்ப்பந்தித்ததால், இவ்வாறு தன் கருத்தை மொழியலானார்:— "நான் அபஜய மடைந்து விட்டேன்; அவரது தகவலை நான் காணக்கிடைக்கவில்லை. சின்னாட்கட்கு முன் இருந்த பெயரும் பிரஸ்தாபமும் இப்போது இல்லை அவருக்கு. நான் தேடிக்கொண்டலைகிறேனே, அந்தச் சந்திர வதன ரூபி எப்படிப் பட்டவ ரெனில்: பிரபஞ்சத்தின் நாலுதிசையிலும் அவரது சுந்தர வதனத்தில் கீர்த்தி நிலவியிருக்கிறது. அவருக்காகவே நான் இரவும் பகலும், தெருத் தெருவாய் அலைகிறேன். அவரது தேட்டம் ஒன்று தான் எப்போதும் என்னுள் உறைந்து கொண்டிருக்கிறது. நான் தேடிக்கொண்டிருக்கிறேனே அவர், உலகத்தை யெல்லாம் காப்பாற் றக் கூடியவர். பகிரங்கத்தில் அவர் ஒரு பக்கீர்போ லிருந்தாலும் அந்தரங்கத்தில் அவர்தான் பாதுஷா."

பிலாலிடமிருந்து ஜனங்கள் இந்த வரலாற்றைக் கேட்டதும் "எங்களுக்குப் புரிந்து விட்டது; நாங்கள் தெரிந்து கொண்டோம்" என்று சொன்னார்கள். "ஓ, உம்முடைய பேச்சைக்கொண்டு, எங்க

ளுக்கு இந்த விஷயமல்லவா தெரியவருகிறது: இரு லோகத்துக்கும் நாயகமானவர், காலத்தை கடந்து போய்விட்டார்களா? எங்களுக்கு உம்முடைய சகல விஷயமும் தெரிந்து விட்டன. திருநபியின் மெய்க் காதலர் நீர்தானே; உமது பெயர்தானே பிலால்!''

கதைச் சுருக்கம் யாதெனில், ஷாம் தேசத்தில் பிலால், பலநாள் இவ்வாறு இருந்துகொண்டிருந்தார். காலம் கடந்து கொண்டிருந்த தல்லாமல், அவரதுமனதை விட்டு வியாகூலம் போகவில்லை.

ஷாம் தேசத்திலாவது மனதுக்கு ஆறுதல் ஏற்படும் என்று அவர் ஆசை கொண்டிருந்தார். புலம்பித் துடித்துக்கொண்டிருக்கும் உள்ளத்துக்கு இங்காவது உறைவிடம் கிடைக்கு மென்று எண்ணினர்.

ஆனல், இரவும் பகலும் இங்கும் ஒரே களேபரமாய் முடிந்தது அவருக்கு. சதாகாலமும் அவரது அதரங்களில் அல்லாஹ்வுடைய ரஸூலின் திருநாமமே ஒலித்துக்கொண்டிருந்தது. அஹ்மத் அண்ணலின் திருமுகத்தைக் காண அவர் உள்ளம் உருகிக் கொண்டிருந்தது. சர்க்கார் நபியின் திருச்சன்னிதானம் காண, அவரது கண்கள் திகைத்துக் கொண்டிருந்தன. இப்படியே ஒரு நாள் அழுது வடிந்த நிலையில் அவருக்கு தூக்கம் வந்து விட்டது. அவர், தம் கனவில் அப்போது திருத்தூதரின் திருமுகத்தைக் காணலானர்.

இருலோகத்துக்கும் பேருபகாரியானவர் விஜயம் செய்ததைக் கண்டார். அதாவது நமது மேன்மைப் பொருந்திய நந் நாயகம் விஜயம் செய்தருளியதைக் கண்டார்.

திருநபி அண்ணல், என்ன திருவுளமானுர்க ளெனின் :— “எமது உத்தமக் காதலரே! யாம், உமது அருகிலேயேதான் இருக்தோமே, இருந்தும் என் நீர் வியாகுல மடைந்தீர்?”

“ஏ பிலாலே, நீவிர் இதற்கு சற்று சமாதானம் சொல்லக் கடவீர். மதீனா நகரை எதற்காக நீவிர் விட்டு, யாத்திரைக்குப் புறப்பட்டீர்? நாமோ உமது அண்மையிலே இருக்கிறோம். உம்மை விட்டும் ஒரு கணமும் பிரிந்ததில்லையே. நீவிர்தான் எம் சமூகத்தை விட்டுப் போய் விட்டீர், அதற்காக யாம் கோபித்துக் கொண்டு விட்டோம். எதற்காக எம்மிடம் பிணக்கம் கொண்டீர், எதற்காக உயிர் வாழ்வதில் வெறுப்புக் கொண்டீர்? எம்மை மதீனாவில் எங்க விட்டு, இவ்விதம் நீர் வந்திருக்கக் கூடாது''—என்பதாகும்.

உடனே ஹஜ்றத் பிலாலுடைய கண்கள், தூக்கம் நீங்கித் திறந்து கொண்டன. இதனல், முன்னிலும் அதிகமாக அந்தக் காதலரின் மனோவேதனை அதிகரித்து விட்டது. திரு நபியின்

தரிசனம் கிடைத்ததும் பைத்தியம் அதிகரித்துப் போய் விட்டது. கண்களின் நீர் மல்கியது, அதரங்களில் 'யாநபீ, யாநபி' என்ற புலம்பல் நிலவியது. அது "முகதரிசனம் காட்டி விட்டு எங்கே மறைந்துப் போனீர்கள் யாநபியே. மகிமைப் பொருந்தியவர்களே, தாங்கள் சென்ற இடத்துக்கு என்னையும் அழைத்துக் கொள்ளுங்கள்" என்பதாகும்.

"நபி பெருமானுர் அடிக்கடி வற்புறுத்தினுர்கள், நான் மறந்துப் போனேன். என் பிரிய மஹ்பூபின் சுதேசத்தை நான் இனி ஒரு போதும் விட்டு வர மாட்டேன்" இப்படிச் சொல்லிய வண்ணம் இறுதியாய் பிலால், மதீனு நகர் நோக்கிப் புறப்பட்டார். மன நிம்மதியின்றி, பார்வைக் கலிந்து, கண்ணீர் உகுத்தவராகப் போய் திருநபியின் சுதேசத்தைக் கண்ணுற்றதும், மனக்கவலை மீண்டும் புத்துயிர் பெற்று விட்டது. மதீனு நகர் மீது பார்வை செலுத்தியதும் இந்தச் சிந்தனை அவரை ஆட்கொண்டது (அதாவது):—

"முதன் முதல் நான் பீபி பத்தூல் (பாத்திமா) நாயகியின் சமூகத்திற் செல்வேன். உலகில் திருத்தூதரின் எஞ்சியுள்ள ஒரே அடையாளம் அந்த சிரோமணிதான்." பீபி பத்தூலுடைய வீட்டு வாயலில் போய்ச் சேர்ந்து இவ்வாறு பிரலாபிக்கலானுர்.

"தங்களுடைய திருச்சமுகம் அடியான் இதோ வந்திருக்கிறேன். நான் மதீனு நகரை விட்டுப் போய் விட்டேன். நிச்சயமாக இது என்னுடைய தப்புதான். என்னுடைய தவறை, முஹம்மது முஸ்தபா நபிக்காக தாங்கள் மன்னித்தருள வேண்டும்" என்பதாகும். வீட்டுக்குள்ளிருந்து சப்தம் வந்தது: "அவ்வுத்தமி வீட்டில் இல்லை" என்று.

"அவர்கள் எப்போது திரும்புவார்கள்?" என்று பிலால் கேட்கலானுர். "அவர்கள் இனி இங்கு திரும்பியே வரமாட்டார்கள்" என்று பதில் மொழி வந்தது.

அதாவது, "உலகத்தை விட்டே அவ்வுத்தமியார் இறுதி யாத்திரை செய்துவிட்டார். கியாமத்து (முடிவு) நாள் வரை நீவிர், பீபி (பாத்திமா) பத்தூலை சந்திக்கவே மாட்டீர். அன்னுர் சுவர்க்கத்தில் நபி திருத்தூதாவர்களை தரிசிக்கப் போய் விட்டார்" என்று இதைக் கேட்டதும், பிலால் மீது பேரிடி விழுந்தது போலாயிற்று. நபியின் அந்த மெய்க்காதலர், பைத்தியம் ஏறி மனம்போன போக்கில் திரியலானுர்.

"இனி என்னுடைய வாழ்வே வீணுய்ப் போய் விட்டது; உலகம் என்னை நாசம் செய்து விட்டது; காலம் என்னை கொள்ளையடித்து விட்டது. என் காதற் கவிதையை நான் யாரிடம் படித்துக்

காட்டுவேன்? எனக்கு வேண்டிய பிரியர்கள் எல்லோரும் உலகை விட்டேகி விட்டார்களே" என்று ஏங்கினர் பிலால்.

இதற்குள் சிரோமணி பத்தூலின் இரு முத்துப் பிள்ளைகள், வெளியில் விளையாடிக் கொண்டிருந்து விட்டு, அப்போது இல்லத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அம்மழலை மொழியினர், தம் வாயலில் பிலால் நின்று கொண்டிருப்பதைக் கண்டார்கள். ஹஸனும் ஹுஸைனும் பிலாலை கட்டி யணைத்துக் கொண்டு, முகம் நோக்கிக் கூறலானார்கள்:— "தாங்கள் மதீனாவை விட்டு எங்குப் போய் விட்டீர்கள், பிலாலே! தாங்கள் போய் விட்டதனால் நாங்கள் எவ்வளவு மனச் சஞ்சல மடைந்தோம், தெரியுமா? இத்தனை நாளாக தாங்கள் எங்கு போயிருந்தீர்கள்; சொல்ல மாட்டீர்களா? பள்ளிவாசலில் தாங்கள் பாங்குச் சொல்லவில்லையே, ஏன்?"

"எமதருமைப் பாட்டனார் இருக்கும்வரை தாங்களும் இங்கேயே இருந்தீர்கள். அவர்கள் போய் விட்டார்க ளென்றால், பிரியமான தாங்களுமா எங்களை விட்டுப் போக வேண்டும்? பாட்டனார் போய் விட்டார்கள்; மேலும் தாங்களும் போய் விட்டீர்களே— அந்தோ, எத்தீம் (அனாதை) களாகிய நாங்கள், அனைத்தும் இழந்த கதியினரானோம்."

பிலால் நின்று கொண்டிருந்த வீட்டு வாசல் அருகில், ஒரு பெருகூட்டம் கூடி விட்டது. 'திரு நபியின் மெய்க்காதலர் திரும்ப வந்து விட்டார்' என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சுருங்கக் கூறுமிடத்து, கையேந்தி ஜனங்கள் விண்ணப்பித்துக் கொண்டதாவது:—

"ஏ சகோதரரே, இன்று எங்களுக்கு, தங்கள் பாங்கு ஒலியை கேட்கச் செய்தருள வேண்டும். ஐங்காலமும் பாங்கொலி கேட்கிறோம். ஆனால் அந்த இன்பம் இல்லையே! ஆண்டவனல்லவோ, தங்களுக்கு அந்த இனிமையான குரலொலியைத் தந்திருக்கிறான்" என்று.

அதற்கு பிலால் சொல்லலானார்:-அருமையை உணர்ந்து என்னைப் பாராட்டும் அந்தப் பெருந்தகையாளர் (நபி) இன்றில்லையே: பின்னர் நான் யாருக்கு என் பாங்கொலியை சொல்லிக் காட்டுவேன்; (மேலும் பிலால் சொன்னார்:) இறைவனின் ஹபீப் (நபி) எப்போது இல்லாமற் போய் விட்டார்களோ, அப்போதே என்னுடைய பாங்கொலியிலும் அந்த இன்பம் இல்லா தொழிந்தது."

ஹஸன்-ஹுஸைனர் சொல்லலானார்கள்:— "ஏ பிலாலே! எங்களுக்காகிலும் தங்கள் பாங்கொலியைக் கேட்கச் செய்தருள வேண்டும்; எங்கள் மனது மாசற்று நிம்மதி யடையும்" என்று.

அதற்கு பிலால் சொல்லலானார்:— 'மாட்டேன் என்று சொல்வதற்கு எனக்கேது தைரியம்! மார்க்கக் கட்டளையை தாங்கள் இடும் போது அதைப் பற்றி ஆக்ஷேபிக்க எண்ணலாமோ! சின்னஞ் சிறு எஜ்மானரே, தங்கட்கு நான் அவசியம் பாங்குச் சொல்வேன். தாங்கள் இட்ட கட்டளையை அவசியம் நிறைவேற்றி வைப்பேன், நான்.'

'அவர் பாங்குச் சொல்வார்' என்பதைக் கேள்வியுற்றனர் ஜனங்கள். எனவே அதற்கு முன் எவ்வளவு கூட்டம் கூடினதில்லை என்பதை சொல்லவும் போமோ!

மதீனாவில் வதியும் சிறியோர் பெரியோர் அனைவரும், ஆனந்தத்தில் மூழ்கி யிருந்தனர். இதைப் பற்றியே கிழவரும் வாலிபரும் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தனர். வாருங்கள், பாங்கு கேட்கப் போவோம், பேரானந்தம் உண்டாகும்.

"இன்று நபியின் சத்தியக் காதலர் மீண்டும் பாங்கு சொல்லப் போகிறார்—" என்று ஜனங்கள் கூறி கொண்டிருந்தனர்.

பிலால், பாங்குச் சொல்வதற்காக பள்ளி வாசலிற் போனார். சில வாக்கியங்கள் பாங்கு மொழிகளைச் சொல்லலானார். அதற்குள் அவருக்கு ஏதோ எண்ணம் தோன்றி விட்டது. எல்லோர் உள்ளங்களும் அந்த பாங்குச் சப்தம் கேட்டு, இன்பத்தில் திளைத்து இருந்தன. "அன்ன முஹம்மதுன்..." என்ற திருப்பெயர் அவரது நாவிலிருந்து ஒலித்த போது, பிலால் உணர்வு அற்றவராகி அப்படியே துடித்து மண் மேல் விழுந்து விட்டார். அதாவது அப் புனித பிலாலும் பரிசுத்த திரு நபியின் சமுகம் போய்ச் சேர்ந்து விட்டார். இப்படிப்பட்ட அடிமையின் பால் அரச பீடம் அர்ப்பணமாகக் கடவது. யௌவன ஜீவனை தன் எஜமானருக்காக தியாகம் புரிந்த சீலர் அவரேயாவர்.

---

குறிப்பு :—இவ்வரலாறு உர்து கவிதைகளி லிருந்தும், உர்து பாவலர்கள் பாடும் கீதங்களி லிருந்தும் கிரகித் தெழுதப்பட்டது. ஆனால் இதற்கு சரியான சரித்திரங்களில் ஆதாரம் காணக்கிடைக்க வில்லை.—(மஆலி)

(9-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :

# : : : : சாரசங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## மனிதனுக்கு அவனது முயற்சிக்குத் தக்க பலனே கிடைக்கும்.

எந்த மனிதனும் பிறருடைய (பாபங்களின்) சுமையை சுமக்கவே மாட்டான். எனவே, மனிதனுக்கு, அவனவன் செய்த (முயற்சிக்குத் தக்க) அளவே தான் (பலாபலன்) கிடைக்கும். அவனுடைய முயற்சிக்குரிய பிரயோஜனத்தை (ஆகிரத்தில்) கண்டு கொள்வான். அவன் செய்த முயற்சிக்குரிய பூரணமான பகரத்தையும் (ஆகிரத்தில்) அடைவன். (ஸூரா: நஜ்ம்: ருகூ: 3.)

## உங்கள் மக்களும், செல்வமும் இறைவனை மறக்கச் செய்யக் கூடாது.

ஈமான் கொண்ட (முஸ்லிமான)வர்களே! இதை நன்ருய் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்: உங்கள் (பணம், காசு) செல்வமும் (குழந்தை குட்டி) மக்களும் உங்களை இறைவனுடைய (இபாதத்தாகிய) நினைவை விட்டும் மறக்கச் செய்து விடவேண்டாம். எவனேனும் இப்படி (மறதியில் வீழ்ந்து தவறு) செய்வானுனல், அவன் மிகப் பெரும் நஷ்டவாளியாய் கிடப்பான். எனவே, அல்லாஹு தஆலா, உங்களுக்குக் கொடுத்தவைகளி லிருந்து (தான தர்மம் செய்து) செலவிடுங்கள்—உங்களுக்கு மரணம் வந்தணுகுவதற்குமுன் இ(க்காரியத்)தைச் செய்து கொள்ளுங்கள். அங்ஙனம் (உங்களுக்கு) மரணகாலம் நேர்ந்து விடுங்கால் “இறைவனே! இன்னும்சொற்ப காலத்திற்கு (தாமதித்து) எனக்கு தவணை கொடு; நான்(சகலத்தையும்) தான தர்மம் செய்து, உன்னுடைய நல்லடியார்களில் சேர்ந்து கொள்கிறேன்” என்று சொன்னுல், ஒரு பயனும் உண்டாகாது. ஒரு மனிதனுக்கு (ஆத்மாவுக்கு) முடிவு காலம் வந்து விடுங்கால், அல்லாஹ் (தஆலா) அந்த தருணத்தை கொஞ்சங்கூட பிந்தச் செய்ய மாட்டான். இறைவன் உங்களெல்லோரின் காரியங்களையும் நன்கறிந்தவனுக இருக்கின்ருன். (ஸூரா: முனபிகூன்; ருகூ:2)

## மக்களும், செல்வமும் ஒரு தொல்லை (பித்னு) ஆகும்!

ஈமான் கொண்ட (முஸ்லிமான)வர்களே! உங்களுடைய (பெருமிதச்) செல்வமும், (விசுவாசிக்கும்) பிள்ளை குட்டிகளும், (உலகத்தில்) உங்களுக்கொரு பித்னு (தொல்லை) யாகும். எனவே, (இந்த தொல்லையை, ஈமானுடைய பேணுதலுக்காக விட்டுத் தொலைத்த) பக்தர்களுக்கு மிகப் பெரும் நற்கூலி யுண்டு. (ஆதலின்) நீங்கள் இயன்றமட்டும் அல்லாஹு தஆலாவுக்குப் பயந்து ஒழுகிக்கொள்ளுங்கள். அவனு(டைய கட்டளைகளு)க்கு செவிசாயுங்கள்; பணிந்து நடவுங்கள்; தாராளமாக(அல்லாஹ்வுடைய பாதையில் பணத்தை)செலவு செய்யுங்கள். இதுதான் உங்களுக்கு (பிற்கால ஆகிரத்தில்) பிரயோஜனம் தரக்கூடியதா யிருக்கும். மேலும் யார், உலோபித் தனத்தை விட்டு தன்னைப் பாதுகாத்துக் கொள்கிருரோ அவரே, (இறுதியில்) ஜெயம் பெற்றவராய் விளங்குவார். (ஸூரா: தகாபுன்; ருகூ: 2)

## நன்றி மறக்கும் மாந்தன் அடையும் பலாபலன்

ஆனல், மனுஷ்யனுடைய நிலைமையோ (வேறுவிதயாய் இருக்கிறது; அதாவது:) இரக்ஷகன், மனிதனை சோதிப்பதற்காக அவனுக்கு அருட்பாக்கியச் செல்வமும் கௌரவமும் கொடுத்தால், '(ஆஹா) என்னுடைய இறைவன், என் திறமைக்கேற்ப எனக்கு கௌரவம் அளித்தான்' என்று கூறிப் பெருமை கொள்கிருன். அங்ஙனமே அவனை இறைவன் சோதிப்பதற்காக (அவனது செல்வத்தை) குறைத்து (உணவு பாக்கியமாகிய) ரிஸ்கில் இக்கட்டை உண்டாக்கி விடுங்கால் '(அந்தோ!) என்னுடைய இறைவன் என்னை (நியாயமின்றி) அகௌரவப்படுத்தி விட்டான்' என்று கூறிப் பதறுகிருன். (இறைவன் செயல்)ஒருபோதும் அப்படி (நீதியற்று) இல்லை. ஏ மாந்தரே! நீங்கள்தான் சுயமே, இறைவனுடைய அருட்பாக்கியங்களைப் பெற்றிருந்தும், நன்றி கெட்டவர்களாய்ப் போய் இழிவடைகிறீர்கள். உங்களுடைய உண்மையான நிலைமையோ (யாதெனில்): நீங்கள் எளிய அனுதைகளை(ப் போஷித்து) கண்ணியப் படுத்துவதில்லை; உங்களிடையுள்ள ஏழை எளியோர்க்கு நீங்கள் உணவு ஊட்டுவதில் ஆர்வம் கொள்வதில்லை. இறந்துபோனவரின் (சுற்றத்தாரின்) உடைமைகளை (வாரிஸுதாருக்குச் சரியாக) அளிக்காமல், (எல்லாவற்றையும்) சுருட்டி உண்டு விடுகிறீர்கள். எனவே நீங்கள் (பணங்காசு) செல்வத்தில் அதிகமான ஆசை வைத்திருக்கிறீர்கள். (உலகச் செல்வம்) அனைத்தும், தகர்க்கப்பட்டு சின்னுபின்னமாய் விடும் (கியாமத்துடைய) நாளில், என்ன நிகழும் என நினையுங்கள்; (ஏ நபியே!) உமது இறைவன், அந்நாளில் எழுந்தருளி காட்சியளிப்பான். மலக்குகள் (அந்த திருக்காட்சியில் லயித்து) அணிவகுத்து நிற்பார்கள். அந்நாளில் நரகமும் (எல்லோர் பார்வைமுன்)

கொண்டுவரப்படும். அப்போதுதான் மாந்தன், வாஸ்தவமான படிப்பினையை உணர்ந்து கொள்வான்; (அப்போது) அதனாலென்ன பிரயோஜனம்?' (ஸூரா: பஜ்ர்; ருகூ: 1.)

## துன்பங்கள் அனுபவிக்கவே மாந்தன் படைக்கப் பட்டான்.

(நபியே, இறைவனாகிய) யாம், அந்த (மக்கமா) நகர் பேரில் ஆணை வைக்கின்றோம்; அந்த நகரத்தில்தான் நீர் வாசஞ் செய்கின்றீர். மேலும் யாம் (ஆதமும் அவரது மக்களுமாகிய) பிதா-புத்திரர் மீது ஆணைவை(த்துக் கூறு)கின்றோம்: யாம் மனிதனை-அவனது ஆயுட்கால பரியந்தம் துன்பங்களை அனுபவிப்பதற் காதாரமாகவே படைத்தோம். அங்ஙனமிருக்க, (அத்துன்பங்களை சகிக்க) அவனுக்கு ஆற்றல் இல்லை யென்று கருதிக் கொண்டிருக்கிறானா? மேலும் அந்த மாந்தன் (மிகப்பெருமையோடு) 'நான், குவியல் குவியலாக செல்வத்தை செலவு செய்துவிட்டேன்' என்று கூறுகின்றான். இங்ஙனம் (வீண் செலவு) செய்த தன் அந்தரங்கத்தை யாரும் (உள்ளூர்ந்து) பார்க்கவில்லை யென்று அவன் கருதுகின்றானா? நாம் அந்த மாந்தனுக்கு இரண்டு நேத்திரங்களைக் கொடுக்க வில்லையா? நாவையும், இரண்டு உதடுகளையும் யாம் (அவனுக்குக்) கொடுக்க வில்லையா? மேலும் அவனுக்கு (நன்மை-தீமை என்னும்) இரண்டு மார்க்கங்களை காட்டிக் கொடுக்க வில்லையா? இங்ஙனம் (அருள் புரிந்திருந்து) இருந்தும் அவன் (சௌக்கியமாக) படுகஷ்டக் குழியிலிருந்து தப்பித்துக் கரையேற வில்லை. (ஏ நபியே!) அந்தப் படுகஷ்டக் குழி யாதென்பதை நீர் அறிவீரா? (சொல்கிறோம், அந்தப் படுகஷ்டக்குழியிலிருந்து தப்பிக்கும் மார்க்கம் யாதெனில்:) யாராயினும், அடிமையானவரை விடுவித்து விடவேண்டும். பசியெடுத்துள்ள நேரத்தில் உற்றார்க்கும் அனாதைகட்கும், மண்ணில் புரளும் (வறுமையில் உழலும்) ஏழை எளியோருக்கும் உணவு ஊட்ட வேண்டும். (இத்துடன்) ஈமான் கொண்டு நற்கருமம் புரிகிறவர்களின் நற்கூட்டத்தில் சேர்ந்து கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவர் தமக்குள், பொறுமையைக் கொண்டு உபதேசம் செய்ய வேண்டும். (ஒருவரையொருவர்) விசுவாசித்து அன்பு செலுத்தவும், நற்போதனை புரியவும் வேண்டும். இப்படிப்பட்ட (நற்குண நல்நடத்தையுடைய)வர்களே (ஆகிரத்தில்) போற்றப்படுகிறவர்களாவர். எனவே, எமது ஆயத்து (அத்தாக்ஷி)களை மறுத்துத் திரிந்தானே அவன் பழிக்கப்படுகிறவனாவான். (ஸூரா: பலத்; ருகூ 1.)

## மனதிலுள்ளது வெளிப்படுத்தப்படும் நாள்.

சந்தேக மில்லாமலே, மனிதனானவன் தன் இறைவன் பால் நன்றி கெட்டவனாகிப் போய்விடுகின்றான். மேலும், மாந்தன் இந்த

விஷயத்தைத் தெளிவுற அறிந்தவனாகவும் இருக்கின்றான். மாந்தர் சொத்து செல்வத்தினிடம் அதிக ஆசைக் கொண்டிருக்கிறார்களே அ(தைப் பற்றிக் கேட்கப்படுவ)தற்காக, கப்ருகளிலிருந்து அவர்கள் (கியாமத்து நாளில்) எழுப்பப்படுவார்கள். அவர்களின் உள்ளத்தில் மறைந்திருந்தவை யெல்லாம் அப்போது (பகிரங்கமாய்) வெளிப் படுத்தப்படும். அந்த நாளில் நிகழ்பவைகளை யெல்லாம் இறைவன் (எப்போதும்) நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

## நஷ்டத்தில் வீழாதவர்களின் லக்ஷணம்.

(அஸ்ர்) நேரத்தின் மீது ஆணையாக. நிச்சயமாக மாந்தன், நஷ்டத்தில் (வீழ்ந்து) கிடக்கின்றான். ஆனால், ஈமான் (விசுவாசம்) கொண்டு, நற்கருமங்கள் செய்கிறவர்களையும் ஒருவர்க்கொருவர் சன்மார்க்கம் காட்டித் தருபவர்களையும், பொறுமையைப் பற்றி போதிப்பவர்களையும் தவிர்த்து. இன்னோர் எக்காலும் நஷ்டமடை யவே மாட்டார்கள். (ஸூரா: அஸ்ர்.)


## மிஃராஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்

(புதிய பதிப்பு)

"மிஃராஜுல் ஆரிபீன்" என்பது பதினான்கு இல்முகளுக் கும் ஓர் அலைகடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமத்துல் லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சிய மான 'மின்ஹாஜில் ஆபிதீன்' என்னும் கிரந்தத்திலிருந்து வெகு நுட்பா நுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கி யிருக்கும் 'மஃரிபா' என்னும் தீட்சை ஞானத்தின் பாகு பாடுகளையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விவரித் தெழுத வேண் டுமானால் எவ்வளவு நீடித்தெழுதினாலும் முடியாது. நோட்ட மிட்ட நண்பர்களுக்கே இதன் அருமை விளங்கும்.

| | |
|---|---|
| சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு | ரூ. 4—0—0 |
| அரபுத் தமிழ் றப்பு காகிதம் கலிகோ பைண்டு (அச்சாகிறது) | ரூ. 4—6—0 |

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இரத்தச் சின்னம்.

## (தொடர் கதை 16—வது பகுதி)

### 31–வது அத்தியாயம்

ஸிம்ஸன் அன்று காலை பத்திரிகைகளை ஒன்றன்பின் ஒன்ருக படித்து பக்கத்தில் ஒழுங்காக வைத்துவிட்டு, "போலீஸால் ஒன்றும் செய்யமுடியவில்லை. பாவம் நமது பெண்டனை வையாத பத்திரிகையே கிடையாது. அவர்தான் என்ன செய்வார்? எவ்வாறு நீயும் நானும் இக்கொலைகளை தடுக்க முடியாம லிருக்கிருேமோ அதேபோல் அவரும் தடுக்க வசதியில்லாமல் அவஸ்தை படுகிருர்" என்று முன்னுல் நின்ற குலோரியாவைப் பார்த்து சொன்னுர். எப்பொழுதும் சந்தோஷ முகத்துடன் தோன்றும் குலோரியா அன்று சோர்ந்த முகத்துடன் உற்சாகமின்றி தோன்றினுள்.

"நீங்கள் அதே வேலையிலிருந்திருந்தால் உங்களுக்கும் தற்போது இன்ஸ்பெக்டருக்கு கிடைக்கும் தூஷணை கிடைக்காதோ? போலீஸ் தாங்கள் நினைக்கும் காரியங்களை யெல்லாம் சாதித்துவிட முடியுமா?" என்ருள்.

"உனது பேச்சிலிருந்து நீ போலீஸுக்கு மதிப்பு கொடுப்பதாக தெரியவில்லையே?" என்று ஸிம்ஸன் கேட்டார்.

"நான் போலீஸை மதித்தால் என்ன, மதிக்காவிட்டா லென்ன?"

"நீ ஒரு அபூர்வமான பெண். உனது மனதில் இரக்கம் என்பதே இருப்பதாக தெரியவில்லை. நீ கிரீனிடம் வேலை செய்து வந்தாயல்லவா?"

"ஆம்"

"சில நாட்கள் அவர் வீட்டிலேயே தங்கியிருந்தாயா?"

"ஆம் சிலநாட்களிருந்தேன். அதை ஏன் கேட்கிறீர்கள்?"

"உனக்கு அங்கு பூமியின் கீழுள்ள அறையைப்பற்றி தெரியுமோ என்று நினைத்தேன்"

"ஏன்? எனக்கு அவ்வறையைப்பற்றி நன்ருகத் தெரியும். அதைப்பற்றி கிரீன் என்னிடம் சுமார் ஒரு டஜன் முறை சொல்லி,

தான் அவ்வறையைக் கட்ட எவ்வளவு பணம் செலவு செய்தாரென்று பெருமையாக சொல்லுவார் ''

"ஓஹோ: அந்த அறையின் சாவி வழமையாக எங்கு வைக்கப் பட்டிருக்கும்?"

"கிரீனின் மேஜையில்தான். நீங்கள் கேட்பதைப்பார்த்தால், எனக்கு அவ்வறையின் இரகசியம் தெரியுமென்றும் அதனால் இரவு நடந்த கொலையில் நானும் சம்பந்தப்பட்டிருப்பேன் என்றும் நினைக் கிறீர்களோ? "

"நான் ஒன்றும் நினைக்கவில்லை. மற்றவர்களைவிட உனக்கு அவ் வீட்டைப்பற்றி அதிகம் தெரியுமே என்று சும்மா கேட்டேன். அந்த இரகசிய அறையின் கதவை சப்தம் கேட்காமல் திறக்கமுடியுமோ?"

" அந்த கதவை திறந்தால் சப்தமே கேட்காது. அதிருக் கட்டும். நீங்கள் உங்கள் காரியத்தைப் பார்க்காமல் ஏதேதோ கேட் கிறீர்களே. இதோ உங்கள் கடிதங்கள் பார்த்து பதில் எழுதுங்கள்" என்று குலோரியா சொல்லி, தனது கையிலிருந்த கடித கட்டை ஸிம்ஸன் முன் வைத்தாள்.

" குலோரியா ! இன்றிரவு நீ என்ன செய்தாய் ?" என்று நேராக கேட்க ஆரம்பித்தார்.

"இரவா! எனது வீட்டிலேயே யிருந்தேன்"

"முழு இரவும் வீட்டிலேயேவா யிருந்தாய்?"

அதற்கு குலோரியா ஒன்றும் பதில் சொல்லாமல் நின்றாள்.

"இரவு சுமார் எட்டரை மணிக்கு கையில் ஒரு சிறிய பார்ஸ லுடன் வெளியே சென்றது உண்மையல்லவா?"

இதற்கும் அவள் பதில் சொல்லவில்லை.

"எனது ஆள் உன்னை தற்செயலாக பார்க்க நேர்ந்தது. ஆனால் அவர் பார்வையினின்றும் மறைந்து விட்டாயாம். எங்கு போனாய்? இரவு சுமார் 11 மணி வீட்டிற்கு திரும்பி வந்தாய்"

"காற்றில் உலாவி வர போனேன். இந்த ஊர் மேப்பை கொண்டு வாருங்கள். நான் எந்த வழியாக போனேன், எந்தவழியாக திரும்பினேன் என்பதை காட்டுகிறேன்" என்று சாந்தமாகவே குலோரியா பதில் சொன்னாள்.

" நீ சென்ற வழி எனக்கு தெரியும் என்று வைத்துக்கொள் '

"ஓஹோ. அப்படியாகில் நான் சென்ற வழியை உங்களுக்கு சொல்லவேண்டியதில்லை"

"குலோரியா! நான் சொல்வதைக் கேள். உனக்கும் கொலைக்கும் யாதும் சம்பந்தமிராதென்று என் மனதிற்கு நன்ருக தெரிகிறது. இருந்தாலும் இரவு உன் நடத்தை சந்தேகத்திற்கு இடம் கொடுக்கிறது. அதைப்பற்றி இன்ஸ்பெக்டருக்கும் தெரிவிக்கவில்லை" என்ருர்.

"என்பேரில் சந்தேகம் இன்று இரவுதானு? எப்போதுமே என் பேரில் சந்தேகப்படுவது சகஜம். என்னைப்பற்றி நீங்கள் இவ்வளவு தூரம் அறிந்திருப்பதால், நான் உங்களிடம் வேறு ஒன்றும் சொல்ல அவசிய மில்லை" என்ருள்.

ஸிம்ஸன் அவளை முறைத்துப்பார்த்தார். அவளோ கோபமோ, பயமோயின்றி சாந்த பார்வையுடன் நின்ருள்.

" நீ இரவு எங்கிருந்தாயோ, அதனுல் உனக்கு யாதும் தீங்கு வராதென்று நினைக்கிறேன்" என்று ஸிம்ஸன் சொல்ல "நானும் அவ்வாறே நினைக்கிறேன் " என்று சொல்லி பக்கத்திலுள்ள தனது அறைக்குச் சென்ருள்.

" இவள் அபூர்வமானவள் தான் " என்று தனக்குத்தானே ஸிம்ஸன் சொல்லிக் கொண்டார். இவருக்கு சாதாரணமாக பெண்ணென்ருல் பிடிக்காது. ஆனுல் குலோரியாவின் பக்கம் தன்னையறியாது மனது சென்று கொண்டிருந்தது. அவள் அழகு இவர் மனதைக் கவரவில்லை. அவள் அழகுடையவள் என்று இவருக்குத் தெரியும். இருந்தாலும் எவ்வாறு தனது அறையின் சுவர்கள் வர்ணமிட்டு அழகாக தனக்கு தோன்றுகிறதோ, அவ்வாறே அவள் அழகும் இவருக்கு தோன்றியது.

பிறகு முன் படித்த பத்திரிகைகளையே எடுத்து மறுமுறையும், போலீஸின் திறக்குறையைப்பற்றி விபரித்திருப்பதைப் படித்தார். அச்சமயம் அவர் எதிர்பார்த்தபடி, பென்டனும் அவசரமாக வந்து முன்னிருந்த நாற்காலியில் சோர்ந்து உட்கார்ந்தார்.

" எனது வேலையை ராஜிநாமா செய்யுமாறு கமிஷ்னர் கேட்டார் " என்று பென்டன் சொல்லும்போது, ஸிம்ஸன் எதிர்பார்த்ததற்கு மாருக, பென்டன் முகம் சந்தோஷத்துடன் தோன்றியது. " அதைப்பற்றி நான் ஒன்றும் கவலைபடவில்லை. மூன்று வருடத்திற்கு முன்பே எனது அண்ணன் சொத்து எனக்கு கிடைத்ததும், இவ்வேலையை விட்டு விடலாமென்றிருந்தேன் " என்ருர்.

அப்பொழுது தான் ஸிம்ஸனுக்கு பென்டன் சொத்து பணம் உடையவர் என்று தெரியும்.

"என்ன செய்யப் போகின்றீர்?" என்று ஸிம்ஸன் கேட்க, பென்டன் சிறித்துக்கொண்டே "கவர்ன்மென்ட் ஆபீஸ்களில், ராஜிநாமா செய்யுமாறு சொன்னால், செய்ய வேண்டியது தான். ஆனால் நான் ராஜிநாமா செய்தாலும், அதை அடுத்த மாதக்கடைசியில் தான் ஏற்கப்படும். அதற்குள் உங்களுக்கு என்ன ஆகிறது என்று பார்க்கப் போகிறேன்" என்றார்.

"எனக்கா ?" என்று ஸிம்ஸன் ஆச்சரியத்துடன் கேட்டதும் "ஓஹோ! எனக்கு வந்த இரத்தச் சின்ன சங்க கடிதத்தைப்பற்றி சொல்லுகிறீர்களோ. காலண்டரைப் பார்க்கலாம் இன்னும் 2, 3 நாள் தான் வாழ முடியும்" என்று காலண்டரை சிறித்துக்கொண்டே பார்த்து, "நீங்கள் அதையா எதிர்பார்க்கிறீர்கள்? அதிருக்கட்டும். நீங்கள் ஏன் ராஜிநாமா செய்யவேண்டும்? நான் கமிஷ்னரைப்பார்த்து ஏதும் சொன்னால்......" என்று சொல்வதற்குள், பென்டன் "நீங்கள் என்ன சொன்னாலும், கமிஷ்னர் ஒப்பமாட்டார். எனது ராஜிநாமா ஒப்புக்கொள்ளும் வரை நான் இந்த இரத்தச் சின்ன சங்க கேஸில் தானிருப்பேன். அதற்கு காரணமும் நீங்கள் தான்." என்றார்.

"நானா ?"

"ஆம். கமிஷ்னரிடம் உங்களுக்கு வந்த இரத்தச் சின்ன சங்க கடிதத்தைப்பற்றி தெரிவித்து, உங்களை அந்த நாள்வரை காப்பாற்றும் பொறுப்பை எனக்கு கொடுக்குமாறு கேட்டுக்கொண்டேன்" என்றார் பென்டன்.

அச்சமயம் அடுத்த அறையிலிருந்து சில கடிதங்களை டைப் அடித்து, கையெழுத்துக்காக, இவ்வறைக்கு குலோரியா வந்தாள். அவளைப் பார்த்த இன்ஸ்பெக்டர் "குலோரியா! காலை வந்தனம்" என்றார். அவள் அதற்கு "காலை பத்திரிகைகளிலெல்லாம் உங்கள் பெயர்தான் பிரமாதமாக போடப்பட்டிருக்கிறது" என்றாள். "ஆம் எனது பெயர் பிரபல்யமாவதற்கு அது ஒரு வழி. அதிருக்கட்டும் உனது பெயர் பத்திரிகையில் வந்து அதிக நாட்களாகிறதே"

"அதற்கு தகுந்த நேரம் வந்தால் எனது பெயரும் பிரசுரமாகும் இரத்தச் சின்ன சங்கத்தைபற்றி ஏதும் விஷயம் உண்டா?"

"இனி இரத்தச் சின்ன சங்கத்துக்கு வரும் கடிதங்கள் பேக்கர்தெரு விலாசத்திற்கு வராதாம். வேறு விலாசத்திற்கு வருமாம்" என்று இன்ஸ்பெக்டர் சொன்னார்.

இதைக்கேட்டதும் குலோரியாவின் முகம் மாறியது. அதை பென்டனும் கனித்தார். உடனே சமாளித்து "அவர்கள் பட்டணத்திலேயே ஆபீஸ் திறக்கப்போகிறார்களா? ஏன் திறக்க மாட்டார்கள்? நினைத்ததையெல்லாம் செய்யும் போது, ஒரு பெரிய கட்டிடத்தில் சங்க ஆபீஸ் திறந்து வாசலில் போர்டும் எழுதி தொங்க விடலாம். போலீஸ் அதைப் பார்க்குமாறு போர்டை போடலாம்" என்று குத்தலாக சொன்னாள்.

"ஒரு சிறு பெண் இவ்வாறு பேசுவது ஒழுங்கல்ல" என்று கடிந்து பென்டன் சொன்னார்.

இவர்கள் சம்பாஷணையை சிறித்துக் கொண்டே, ஸிம்ஸன் கேட்டுக் கொண்டிருந்தார்.

"குலோரியா! இரவு எங்கு போயிருந்தாய்?" என்று கீழே குனிந்தவாறு இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"படுக்கையில் படுத்து கனவு கண்டு கொண்டிருந்தேன்"

"ஓஹோ! அப்படி தூங்கிக் கொண்டே நடந்து கிரீன் வீட்டு பின்புற தோட்டத்திற்கு வந்தாயோ?

"ஆ! எனக்கு தெரிந்து விட்டது. எனது காலடியை அந்த தோட்டத்தில் பார்த்திருக்கக்கூடும். அது தான் காலையில் ஸிம்ஸனும் என் பேரில் சந்தேகத்துடன் ஏதேதோ கேட்டார். இரவில் உலாவ போயிருந்தேன். ஜனநடமாட்ட மில்லாத இடத்தில் உலாவ எனக்கு மிக இஷ்டம். அதனால் அந்த தோட்டம் வரை போய் வந்தேன்"

அப்பொழுதும் இன்ஸ்பெக்டர் கீழே பார்த்துக் கொண்டே. "இனி உலாவ போவதானால், டாம் வீட்டு பக்கம் போகாதே, ஏனென்றால் முன்பு ஒரு முறை அப்பக்கம் போய் அவன் பயப்பட நேர்ந்தது" என்றார்.

இதைக் கேட்ட குலோரியாவின் முகம் கோபத்தால் சிவந்தது "டாம் சுலபமாய் பயப்படக் கூடிய ஆளல்லவே, இருந்தாலும்..." என்று சொல்லியவாறு குலோரியா தனது அறைக்கு சட்டென்று சென்றாள்.

பென்டன் சிறிது நேரம் ஸிம்ஸனிடம் பேசிய பின், குலோரியா யிருக்கும் அறைக்கு போக, அவள் "இன்ஸ்பெக்டர்! சில சமயங்களில் எனக்கு உங்கள் பேரில் ஏற்படும் வெறுப்பு எவ்வளவு வென்று சொல்ல முடியாது" என்று கடுகடுத்து சொன்னாள்.

"இருக்கலாம்" என்று பென்டன் பதில் சொன்னார்.

## அத்தியாயம் 32.

இன்ஸ்பெக்டர் பென்டன் பிரான்ஸுக்கு போய் இக்கேஸ் விஷயமாய் சில விசாரணை செய்ய வேண்டு மென்று, உத்திரவு கேட்டார். அதன்படி கமிஷ்னர் சில தினங்களுக்காக லீவு கொடுத்து அவரை அனுப்பி விட்டு, பென்டன் திரும்பி வரும் வரை அக் கேஸுக்கு வேறு ஆளை போடாமல் தானே கவனித்து வந்தார். ஆனால் தன்னால் இக்கேஸில், பென்டன் வருவதற்குள் ஒன்றும் கண்டு பிடிக்க முடியா தென்று நன்கு தெரியும். இருந்த போதிலும் ஸிம்ஸனின் உதவியைக் கொண்டு தன்னாலியன்றதைச் செய்யலா மென்று எண்ணி, ஸிம்ஸனை தருவித்தார். கமிஷ்னருக்கு ஏற்படும் சில சந்தேகங்களை விலக்கிச் சொல்ல ஸிம்ஸன் கமிஷ்னர் ஆபீஸுக்கு வந்தார்.

"கிரீனைக் காப்பாற்றும் பொறுப்பு என்னைச் சார்ந்தததா யிருந்தது. அதுவுமல்லாமல் நானும் அங்கிருந்தேன். அப்படி யிருக்க, பழியை பென்டன் தலையில் போட்டு, அவரை ராஜினமா செய்யுமாறு சொல்வது ஒழுங்கல்ல" என்று ஸிம்ஸன் கமிஷ்னரிடம் சொன்னார்.

இதைக் கேட்ட கமிஷ்னர் நாற்காலியில் நன்றாக சாய்ந்து, நிமிர்ந்து, "மிஸ்டர் ஸிம்ஸன்! உங்கள் மனதை கோவச் செய்ய எனக்கு இஷ்டமில்லை. இருந்தாலும் நீங்களோ போலீஸில் சம்பந்தப்பட்டவரல்ல. அப்படி யிருக்க தாங்கள் என்ன சொன்ன போதிலும், அது பென்டனுக்கு உதவியா யிராது. பென்டனுக்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இருந்தும் அவர் பயன் படுத்திக் கொள்ளவில்லை" என்றார்.

இதற்கு மேல் பென்டனுக்காக பரிந்து பேசுவது பிரயோஜன மில்லை யென்று ஸிம்ஸன் போக எழுந்தார். அவரை உட்காருமாறு கமிஷ்னர் வேண்டி "எனக்கு ஒரு விஷயம் விளக்கி சொல்ல வேண்டும். பெர்ரியை சுட்ட சார்லி இறந்தது ஞாபகம் இருக் கிறதா?" என்று கேட்டார். "ஆம் தெரியும்" என்று பதில் சொல்லி கொண்டே ஸிம்ஸன் மறுபடியும் உட்கார்ந்தார்.

"நீங்கள் சார்லியை விசாரிக்கும்போது ஜெயிலின் அறையினுள் யார் யார் இருந்தது?"

"நானும் இன்ஸ்பெக்டர் பென்டனும் சார்லி சொல்வதை சுருக் கெழுத்தில் எழுத ஒரு ஆளும்"

"அந்த ஆள் ஆணு பெண்ணு?"

"ஆண்தான். அவன் உங்கள் போலீஸ் ஆட்களை சேர்ந்தவனாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். பிறகு ஜெயில் காவற்காரன் ஒன்று இரண்டு முறை அறையினுள் வந்தான். அவன் வரும்போது எல்லாம் நாங்களும் உள்ளே தான் இருந்தோம். அவனே தண்ணீரும் கொண்டு வந்தான். பின்னால் அந்தத் தண்ணீரில் பாஷாணம் கலந்திருப்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டது"

இதைக் கேட்ட கமிஷ்னர், தனது பக்கத்தில் உள்ள காகிதக் கட்டுகளுள் தேடி ஒரு காகிதத்தை எடுத்து "இதோ இருக்கிறது ஜெயில் காவற்காரனின் வாக்கு மூலம். அவன் சொல்வதாவது" என்று சொல்லிக் கொண்டே தன் மூக்கு கண்ணாடியை அணிந்து கொண்டு அந்த காகிதத்தில் உள்ளதை படிக்க ஆரம்பித்தார்.

"கைதி படுக்கையின் பேரில் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு எதிரே அவனை பார்த்தவாறு இன்ஸ்பெக்டர் பென்டன் உட்கார்ந்திருந்தார். ஸிம்ஸன் அறையின் கதவு பக்கம் முதுகை காட்டிய வாறு நின்று கொண்டிருந்தார். நான் உள்ளே போகும் போது கதவு திறக்கப்பட்டே இருந்தது. ஒரு தகர டம்ளரில் சுமார் பாதி குடிக்கும் தண்ணீரை ஊற்றி அதை எடுத்து உள்ளே சென்றேன். இந்த தண்ணீரை உள்ளே கொண்டுபோய் வைத்ததும், இன்னொரு அறையில் என்னை கூப்பிடுவதாக மணி அடிக்கவே நான் அவ் வறையை விட்டு வெளியே சென்றேன். எனக்கு தெரிந்தவரை அதுவரையில் அதில் பாஷாணம் கலந்திருக்க சர்ந்தர்ப்பம் இல்லை. கதவு திறக்கப்பட்டுதான் இருந்தது. நான் அறையினுள் செல்லும் போது இன்ஸ்பெக்டர் என்னிடமிருந்து அந்த தகர டம்ளரை வாங்கி கதவின் பக்கத்திலுள்ள ஸ்டான்டில் வைத்து விட்டு அவர்கள் பேசி கொண்டு இருக்கும்வரை உள்ளே வரக்கூடாது என்று என்னை சொல்லி அனுப்பிவிட்டார்."

"இதில் சுருக்கெழுத்து ஆளைபற்றி இவன் ஒன்றுமே சொல்ல வில்லை. அவன் எங்கு இருந்து வந்தான் என்று உங்களுக்கு தெரியுமா?" என்று கமிஷ்னர் கேட்டார்.

"அவன் போலீஸை சேர்ந்தவனாகத்தான் இருப்பான்" என்று ஸிம்ஸன் பதில் சொன்னார்.

"அப்படியாகில் இதைப்பற்றி பென்டனிடம் விசாரிக்க வேண் டும்" என்றார் கமிஷ்னர்.

பிரான்சில் இருந்து திரும்பி வந்த பென்டனிடம் கமிஷ்னர் டெலிபோன்மூலம் கேட்க, அந்த சுருக்கெழுத்து ஆள் வெளியி லிருந்து கூலிக்காக கொண்டு வரப்பட்டவன் என்றும், சார்லி இறந்த

தால் ஏற்பட்ட மன குழப்பத்தினுல் இந்த சுருக்கெழுத்து ஆளைப்பற்றி விசாரிப்பது தன் மனதில் தோன்ற வில்லை என்றும் சொன்னுர்.

சார்லியின் வாக்குமூலத்தை பென்டனுக்கு தெரிவித்து கேட்க அவர் அந்த சுருக்கெழுத்து ஆளுக்கு இதை எழுதுவதற்காக கூலி கொடுத்த ஞாபகம் மாத்திரம் உண்டு என்றும் அதற்கு மேல் அவனைப்பற்றி ஒன்றுமே தெரியாது என்றும் சொல்லி விட்டார்.

கமிஷ்னருக்குமுன் உட்கார்ந்திருந்த ஸிம்ஸன் அந்த டெலிபோன் சம்பாஷணை தீர்ந்ததும் கமிஷ்னருக்கு திருப்திகரமான பதில் பென்டனிடம் இருந்து கிடைக்க வில்லை என்றும் கமிஷ்னரின் முகத்தைப் பார்த்து அறிந்தார்.

"உங்களுக்காவது அம்மனிதனைப் பற்றி தெரியுமா?"

அதற்கு ஸிம்ஸன் "தெரியாது. அவன் இன்ஸ்பெக்டர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் பின்னுல்தான் நான் நின்றுகொண்டிருந்தேன். அவன் முகத்தையும் சரிவர நான் பார்க்கவில்லை" என்ருர்.

இவர்கள் இவ்வளவு அஜாக்கிரதையாக செய்ததைப் பற்றி கமிஷ்னர் முணுமுணுத்து கொண்டு "அந்த சுருக்கெழுத்து ஆள் இரத்த சின்ன சங்கத்தில் சேர்ந்தவன் என்று தெரிந்தாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன். இதைப்போல் முக்கியமான காரியத்தில் ஊர் பேர் தெரியாத ஒருவனின் உதவியை நாடியது மிகவும் அஜாக்கிரதை. இதைப் போலுள்ள காரியத்திஞலேயே பென்டனின் முயற்சிகளெல்லாம் வீணுய் போயின. பாவம்! பென்டனின் பேரில் எனக்கு அதிகப் பிரியம். இங்குள்ள பழைய ஆட்களுள் அவரும் ஒருவர்; மிக நல்லவர் தான், இருந்தாலும் என் செய்வது. அவர் ராஜிநாமா செய்ய வேண்டியதுதான். பென்டனிடம் நேரிலேயே சொல்லி விட்டேன்" என்ருர் கமிஷ்னர். இவ்விஷயம் ஸிம்ஸனுக்கு தெரியாமலில்லை. போலீஸிலுள்ள எல்லா ஆபீஸருக்கும் பென்டன் ராஜிநாமா செய்வது தெரியும். ஆனுல் இவ்விஷயத்தைப் பற்றி கொஞ்சமும் கவலை படாதது ஒருவரே—அவர் பென்டன். அவர் தான் ராஜிநாமாசெய்வதை மனதில் கொஞ்சமும் நினையாமல் வழமைபடி தன்னுடைய வேலையைப் பார்த்து வந்தார்.

ஒருநாள் மாலை தற்செயலாக ஒரு பார்க்கில் இவர் டாமை சந்திக்க நேர்ந்தது. அவன் எதிர்ப்பார்த்ததற்கு மாருக இவர் சந்தோஷத்துடன் தோன்றியது அவனுக்கு மிகஆச்சரியத்தைக்கொடுத்தது.

"என்ன? இன்ஸ்பெக்டர்! காரியத்தில் வெற்றிகரமான முடிவு சமீபமோ?" என்று கேட்டான்.

“ஆம் எனது முடிவு” என்று பதில் சொன்னர். இன்ஸ்பெக்டரின் வேலே முடிவைப்பற்றி டாமுக்கு அப்போதுதான் தெரியும். “வேலையை விட்டுவிட போகிறீர்களா? இந்த கேசின் முழு விஷயமும் உங்கள் ஒருவருக்குதானே தெரியும். அப்படி இருக்க உங்களே வேலேயினின்று நீக்குவது மிக முட்டாள் தனம். ஏன்? இனி இந்த இரத்தசின்ன சங்கத்தைப் பிடிப்பதற்கு போலீஸ்முயற்சி செய்யப் போவதில்லேயோ” என்று கேட்டான். அதற்கு பென்டன் யாதும் பதில் சொல்லவில்லே.

டாம் தனது கிராம வீட்டிற்கு போகிருன். தகப்பனர் இறந்தபின் இவன் அந்த வீட்டிற்கே போகவில்லே தற்போது அங்கு சில குத்தகை அலுவல்களே கவனிக்க கட்டாயம் போகவேண்டிநேர்ந்தது. அதனல் போய் ஒரு இரவாகிலும் தங்கலாம் என்று எண்ணினன். அங்கு போனதும் பழைய கெட்ட சம்பவங்களின் ஞாபகம் எல்லாம் தோன்றுமே என்று கவலே பட்டுக்கொண்டு இருந்தான்.

“கிராமத்திற்கு போகிருயோ? தனியாகவா?” என்று பென்டன் கேட்டார்.

“ஆம்” என்று டாம் சொல்லியதுடன் பென்டன் மனதில் உள்ளதை ஏதோ அறிந்ததுபோல் “நீங்களும் என்னுடன் வந்தால் நலம். உங்களுக்கோ இந்த இரத்த சின்ன சங்கத்தின் வேலே அதிகமாக இருக்கும். இருந்தாலும் நீங்கள் என்னுடன் வந்தால் மிக சந்தோஷமாக இருக்கும்” என்ருன்.

“நான் இல்லாவிட்டாலும் இங்கு காரியங்க ளெல்லாம் ஒழுங்காகவே நடக்கும். எனக்கு உன்னுடன் வர இஷ்டம். உன் தகப்பனர் இறந்தபின் அவ்வீட்டிற்கு நானும் போகவில்லே. இன்னெருமுறை உங்கள் தோட்டத்தை சுற்றி பார்க்க ஆசையாக இருக்கிறது” என்ருர்.

பென்டனே வேலேயை விட்டு நீக்க தயாராய் இருக்கும் போலீஸ் தலேமை ஆபீசுக்கு பென்டன் இன்னும் இரண்டு நாட்கள் லீவு கேட்டார். உடனே கொடுக்கப்பட்டது.

அன்றிரவே டாம் புறப்படுவதால் இன்ஸ்பெக்டர் அவசரமாக வீட்டிற்கு போய் ஒரு சிறிய தூக்கு பையில் தனக்கு வேண்டிய சாமான்களே போட்டு எடுத்துக்கொண்டு ரெயில்வே ஸ்டேஷனில் டாமை சந்தித்தார். இதற்கிடையில் தான் போகும் விஷயத்தை ஒரு சிறிய காகிதத்தில் எழுதி ஸிம்ஸனுக்கு அனுப்பி விட்டார். அதில் “ஏதும் முக்கிய விஷயம் ஏற்பட்டு நானும் பட்டணம் வரவேண்டும் என்று இருந்தால், உடனே எனக்கு தெரியப்படுத்துங்கள்” என்று எழுதி இருந்தார்.

(தொடரும்.)

187045

# இஹ்யா உலூமுத்தீன் மொழி பெயர்ப்பு

## புதிய இரண்டாம் பதிப்பு

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இமாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹஜ்ரத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப்படுவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞான மார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலுமுத்தீன் ஆகும். அரபு உர்து தெரியாத தமிழ் முஸ்லிம்களுக்கும், இஸ்லாமிய அனுஷ்டானத்தத்துவ ஞானங்களையும், இக்கிதாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகீகத் என்னும் நான்கு வித மார்க்கங்களும் விளக்கப் பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம், அகீதா, ஹதீஸ், தலீல் முதலிய ஆதாரங்களோடு, இஸ்லாம் மதானுஷ்ட சட்டதிட்ட பர்ளு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்களெல்லாம் இந்நாலின் கண், மிகத் துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச்சொல்லித் தெரியக்கூடியதில்லை. இந்த நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரிய வரும்.

நெடுநாட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சாயிருப்பதால் பிரதிகளுக்கு ஆடர் தர முந்திக் கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ. 5---0---0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# “வின்ஸ்டன் சர்ச்சில்”

(முஹம்மது தாவூது)

## (4—வது பகுதி)

1928-ம் வருடம்வரை இச்சச்சரவு நீடித்தது. அந்த வருடத்திலே வரையறையின்றி வனிதையர்க்கு வாக்குரிமை வழங்கும் சட்டத்தைப் பார்லிமென்ட் நிறைவேற்றியது. இடைக்காலத்தில் சர்ச்சில் பிரதானபலியாடாக விளங்கினர். மாதர்களுக்கு ஓட்டுரிமை வழங்கும் விஷயத்தில் சிறிது காலத்துக்குப் பிறகு அவர் அனுதாபம் காட்டிய போதிலும் அவர் நிந்தனைக்கும் அலைக்கழித்தலுக்கும் ஆளாகி வந்தார். அவரது வார்த்தையை எவரும் நம்பவில்லை. அவர் எங்கெங்கு சென்றுரோ, அங்கங்கெல்லாம் பெண்கள் சென்று அவரை அலைக்கழித்து வந்தனர். ஒரு சமயம் பிரிஸ்டலில் ரயில்வண்டியை விட்டிறங்கியதும் மாதர் ஓட்டுரிமை இயக்கத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி குதிரைச் சவுக்கு கொண்டு அவரது முகத்தில் அடித்தாள். தனிப்பட்டமுறையில் அவர்மீது குரோதம் எதுவும் இல்லை என பின்னர் அவள் தெரிவித்தாள். தாமும் குதிரைச் சவுக்கைஉபயோகிப்பதை கனவில்கூட கருதவில்லை என சர்ச்சில் பதில் அளித்தாராம்.

முதலாவது உலகப் பெரும் போருக்கு முன்னுள்ள வருடங்களில், ஒரு வரலாற்று வல்லுனர் கூறியபடி, “நாட்டில் மிகவும் வெறுக்கப்பட்ட அரசியல்வாதி”யாக விளங்கினர். காலனிகளுக்கான துணை மந்திரி என்ற ஹோதாவிலும் பின்னர் வர்த்தக மந்திரி என்ற முறையிலும் பின்னர் உள்நாட்டு மந்திரி என்ற ஹோதாவிலும் லிபரல் கட்சியினர் பிரேரேபித்த அனேக மசோதாக்களை அவர் ஆதரித்தார். சுரங்கத்தொழிலாளர்களின் எட்டு மணி மசோதா, முதியோர் பென்ஷன் மசோதாவையும் கடுமையான வருமான வரி விதிக்கக்கோரும் மசோதாவையும் அவர் ஆதரித்தார்.

அரசாங்க மந்திரி பதவி வகித்தவர்களில் கடுமையான உழைப்பாளிகளில் இவர் ஒருவர் என்பது மறுக்க முடியாத உண்மை; இரவு வெகு நேரம்வரை உழைத்ததோடு அடிக்கடி அங்கும் இங்கும் சென்று இலாக்கா இயங்கும் முறையையும் சோதனையிட்டு வந்தார். தமது மனத்தை மாற்றிக் கொள்வற்கும் அவர் தயங்கவில்லை. வாலிப வயதிலே யுத்த நிருபராக வேலை பார்த்தபோது கோபாக்கினியுள்ளவராக இருந்த அவர் அரசியல் அரங்கிலே இளமையில் பிர

வேசித்ததும் சமாதானப்பிரியராக மாறினர்- சர்வதேச நிலைமை மோசமாகி, ஜெர்மனி அக்கிரமிப்பு நாடாக மாறியதும் உள்நாட்டு மந்திரி என்ற ஹோதாவில் நிச்சயமற்ற போக்கு அனுஷ்டித்து எந்த நிலைமையையும் சமாளிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்வதில் அவர் மும்முரமாக முனைந்தார். சரித்திர ஏடுகளைப்புரட்டிப்பார்க்கும்போது, சர்ச்சில் ஒருவரே தன்னந்தனியாக செயலாற்றி முதலாவது, உலகப்பெரும் போரில் இங்கிலாந்தின் மானத்தைக் காப்பாற்றினர் என்பது தெளிவாகத் தெரியும்.

யுத்தத்தின் ஆரம்பபோக்கு எவ்வாறு இருக்கும் என்பதை மிக நிச்சயமாக, சரியாக முன்கூட்டியே உணர்ந்தார். ஜெர்மனியின் தாக்குதலுக்கு இரையானல் ஒன்பது முதல் பதின்மூன்று தினங்களுக்குள் எதிர்த்தாக்குதல் நடத்துவதற்குப் போதுமான பலம் பிரான்ஸிடம் இருந்தது என 1911-ம் வருஷம் பிரிட்டனின் ராணுவத் தலைவர்கள் நம்பினர். அச்சமயம் சர்ச்சில் சமர்ப்பித்த சரித்திர முக்கியதத்துவம் வாய்ந்த தஸ்தாவேஜி உலகில் தீர்க்கதரிசனத்தின் உன்னத உதாரணம் என இன்னும் கருதப்பட்டு வருகிறது. இருபதாவது நாள் வரை பிரான்ஸ் முழு அளவில் பின் வாங்குமென்பதாகவும் குறைந்த பக்ஷம் நாற்பதாவது நாள்வரை அந்நாட்டில் எதிர் தாக்குதல் நடத்த முடியாதென்பதாகவும் அவர் தீர்க்கதரிசனம் கூறினர். மூன்று வருடங்களுக்குப் பிறகு அவாது தீர்க்கதரிசனம் உண்மையானதை உலகம் தரிசனமாகக் கண்டது. இருபத்தோராவது தினத்தில் பிரெஞ்சுத் துருப்புக்கள் பூரணமாகப் பின் வாங்கினர். யுத்தத்தில் புதிய போக்கு ஏற்படுத்தியதாக ஒப்புக்கொள்ளப்படும் மார்ன்போர் நாற்பத்தோராவது நாள் ஆரம்பமாயிற்று.

சர்ச்சிலின் தஸ்தாவேஜியை "பைத்தியக்காரத் தனமானது" "அனுபவ சாத்தியமற்றது" என பிரிட்டிஷ் ஜெனரால்கள் கருதி, அதனை நிராகரித்தனர். இங்கிலாந்தை எதிர் நோக்கியிருந்த அபாயத்தை உணர்ந்த பிரதமமந்திரி ஆஸ்க்வித், கப்பற்படைத் தலைமையைஏற்றுக் கொள்ளுமாறு சர்ச்சிலை அழைத்ததன் மூலம் அவர்களைக் குழப்பத்திலாழ்த்தினர்.

"கப்பற் படை மட்டுமே நம்மிடம் இருக்கிறது. நமது நம்பிக்கை யெல்லாம் அதில் தான் இருக்கிறது." என்று ஆஸ்க்வித் குறிப்பிட்டார்.

பிரதமரின் அழைப்பை அன்புடன் சர்ச்சில் ஏற்றுக் கொண்டார். ஸீனியர் உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும் நியதியைப் பொருட்படுத்தாமல் கப்பற்படைத் தலைமையில் புரட்சிகர மாறுதல்களை அவர் செய்தார். உயர்தர கப்பற்படை உத்தியோகஸ்தர் இதனல் அவர்களது கூடாரங்களில் பதுங்கி

யிருக்க வேண்டியதாயிற்று. பலம் பொருந்திய கப்பற் படை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட அவர் அனேக மாறுதல்கள் செய்தார். கப்பல்களுக்கு நிலக்கரிக்குப் பதிலாக மண்ணெண் ணய்யை எரி பொருளாக உபயோகிக்குமாறு அவர் செய்தார். புதிய போர்க் கப்பல்களுக்கு 13.5 அங்குல பீரங்கிகளுக்குப் பதிலாக 15 அங்குல பீரங்கிகளை அவர் பொருத்தச் செய்தார். இம்முடிவு மிகுந்த பொறுப்பு வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. ஏனெனில், பீரங்கிகள் பயனளிக்காமற் போனல் கப்பற்படை பலமிழந்து போகும். கப்பற்படை நிபுணர்கள் இவர் செய்த மாறுதல்களைக் கண்டு உள்ளம் வெதும்பிக் கூக்குரலிட்டனர். ஆனல் சர்ச்சில் தமது திட்டத்தை நிறைவேற்றுவதில் பின்னடைய வில்லை. யுத்தம் ஆரம்பமானதும் ஜெர்மனியர்களிட மிருந்த எந்த கப்பலையும் தகர்க்கும் சக்தியை பிரிட்டிஷ் கப்பல்கள் பெற்றிருந்தன.

1914-ம் ஆண்டு கோடைக் காலத் துவக்கத்தில் வழக்கமான கப்பற் படை ஒத்திகையை ரத்துச் செய்து, அதற்குப் பதிலாக மந்திரி சபையின் ரத்து அதிகாரப் பிரயோகத்தையும் பொருட் படுத்தாமலும் மன்னரின் அங்கீகாரம் பெருமலும் காட்டின் மொத்த கப்பற்படை ரிஸர்வையும் யுத்த ஆயத்தமாக்கினர். இவரது இந்த அடாத முடிவு அவரது முன்னறிவை எடுத்துக் காட்டியது. ஆதரவு இல்லாத இந்த யுத்த முஸ்தீபு ஏற்பாடு செய்யப்பட்டு வரும் பொழுது ஆஸ்திரிய அரசகுமாரர் பெர்டினண்டு படுகொலையின் காரணமாக ஐரோப்பா முழுவதையும் யுத்த மேகம் சூழ்ந்து கொண்டது. முறைப்படி பிரிட்டன் போர்ப் பிரகடனம் செய்வ தற்கு மூன்று தினங்களுக்கு முன்பு சர்ச்சிலின் யுத்த முஸ்தீபு பூர்த்தியாயிற்று. காவல் கப்பற் படை முழு ஆயத்தமாக இல்லாத போது இச்சம்பவம் நிகழ்ந்தது.

முதலாவது உலகப் பெரும் போரில் வின்ஸ்டன் சர்ச்சிலின் சரித்திரம் சரிசம துன்பமும் இன்பமும் கலந்ததாக வுள்ளது. ஒரு வாரத்துக்குள் கப்பற்படைத் தலைமை ஸ்திரமற்று, பல மிழந்து காணப்பட்டது. பத்து மாதங்களுக்குப் பிறகு அவர் அடியோடு அகற்றப்படும் வரை அது தலை நிமிரவில்லை.

விமான ராணுவ தளவாட அபிவிருத்தியில் அவர் கவனஞ் செலுத்தினர். ஜெர்மன் விமான நிலையங்களிலும் நீர் மூழ்கிக் கப்பல் ஸ்தலங்களிலும் விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்த வேண்டு மென அவர் தூண்டினர். இந்த நடவடிக்கைகள் மிகவும் வெற்றி யளித்தது. யுத்த அலுவலகம் கூட இவற்றை புகழ்ந்தது. பதினெட்டு டாங்கி (Tank) கள் தயாரிக்க அவர் பணம் ஒதுக்கினர். எனவே, டாங்கிகளின் தந்தையென அவரை வர்ணிப்பது பொருத்த

மேயாகும். கப்பற்படைத் தலைமையை சர்ச்சில் இழந்ததும் "சர்ச்சிலின் பேதமை" என அழைக்கப்பட்ட இத்திட்டம் ரத்துச் செய்யப்பட்டது. பின்னர் இந்த தளவாடங்களின் சக்தியை உணர்ந்த யுத்த அலுவலகம் நாற்பத்தெட்டு டாங்கிகளை தயாரித்து அவற்றை 1916-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் போர் களத்துக்கு அனுப்பியது. ஜெர்மனியர் தமது துப்பாக்கிகளை வீசி யெறிந்து விட்டு ஓட்டம் பிடித்தனர். யுத்தமும் மற்றொரு நிரந்தர மாறுதலுக்குள்ளாயிற்று.

நிர்வாக "வெறி" பிடித்த சர்ச்சில் அடிக்கடி மந்திரியின் அதிகார வரம்பையும் மீறிக் காரியங்கள் செய்தமையால் அவர் தான் பிரதம மந்திரியா அல்லது ஆஸ்க்வித்தா என்பது பற்றிச் சந்தேகம் கூட ஏற்படலாயிற்று. ஆண்ட்வெர்ப் விவகாரம் இவ்விரு மனிதர் களுக்கிடையி லிருந்த பிளவையும் பெரிதாக்கியது.

பிரிட்டிஷ் துருப்புகள் விரட்டி யடிக்கப்பட்டு, பெரும் சேதத் துக்குள்ளான பிறகு அக்டோபர் மாதத்தில் இந்த தகராறு ஏற் பட்டது. நேசதேசப் படையின் இடது பக்கத்து அணியை பாது காத்துவந்த பெல்ஜிய சேனை ஆண்ட்வெர்பில் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறினர். இந்நகரைக் கைப்பற்றிக் கொள்ளுமாறு ஜெர்மனியர்களுக்கு உத்திரவு விடப்பட்டிருந்தது. இவ்வாறு நிகழ்வதைத் தடுப்பதற்காக, எண்ணாயிரம் பிரிட்டிஷ் துருப்புகள், பக்கபல மில்லாமல் பணிந்து வந்த படைக்கு உதவுவதற்காக ஸ்தலத் துக்கு விரைந்து அனுப்பப்பட்டன. துருப்புகளுக்கு உற்சாக மூட்டுவதற்காக சர்ச்சிலும் ஸ்தலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அங்கு போய்ச் சேர்ந்ததும் பெல்ஜிய பிரெஞ்சு உத்தியோகஸ் தர்களிடையே பிரசங்கம் நிகழ்த்தி, நெருக்கடி நிலைமையை விளக்கி அவர்களை உற்சாகப்படுத்தினர். அவரது நிலையைத் தெளிவுபடுத்தி அமெரிக்க நிருபர் இ. அலெக்ஸாந்தர் பின்வருமாறு எழுதினர்:— நுரை தள்ளிய குதிரைமீதமர்ந்து விரைந்து சென்று வீராங்கனையை வீரர் காப்பாற்றும் நாடகக் காட்சியை அது எனக்கு நினைவூட்டியது. உத்தியோகஸ்தர்களுக்கு உற்சாக மூட்டிய பிறகு பிரதம மந்திரிக்குத் தந்தி அனுப்பி, கப்பற் படைத் தலைமையிலிருந்து தாம் விலகிக் கொள்ளத் தயாரென்பதாகவும் தரை சண்டையில் நேரடியாக ஈடுபட ஆவல் கொண்டிருப்பதாகவும் ஆனால் அவசியமான ராணுவ அந்தஸ் தும் அதிகாரமும் அளிக்கப்பட வேண்டு மென்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்ச்சிலின் இப்பிரேரணையை ஆஸ்க்வித் நிராகரித்து, தமது டயரியில் அலுப்புடன் பின்வருமாறு எழுதினர்:— வின்ஸ்டன் மாஜி லெப்டினென்டாக இருந்திருப்பவர், அவரது பிரேரணை அங்கி

கரிக்கப்பட்டிருக்குமானல், இரு பிரபல மேஜர் ஜெனரல்களுக்கும் பிரிகேடியர்களுக்கும் கர்னல்களுக்கும் அவர் தலைவராகி யிருந் திருப்பார்''.

முழு அதிகாரத்தையும் சர்ச்சில் மேற் கொள்வதை இம்மறுப்பு தடுக்க வில்லை. ஆண்ட்வெர்ப் பாதுகாப்பு பெற்று, வெற்றி கரமாக ஜெர்மனியர்கள் விரட்டியடிக்கப்பட்டிருந்தால், ரக்ஷகர் என கௌரவிக்கப்பட்டுக் கொண்டாடப் பட்டிருப்பார். ஆனல் ஆக்கிர மிப்புப் படைகள் பலம் பொருந்தியவையாக இருந்தன. ஐந்து நாட்களுக்கு பகிரத பிரயத்தனம் செய்த பிறகு நேசதேசத் துருப் புக்கள் பின்னடைந்தன. உயிர் சேதம் ஏற்பட்டும் உபயோக மில்லா மற் போனமை குறித்து சர்ச்சில் மீது பழி சுமத்தப்பட்டது. எனி னும், வாபஸாகிச் சென்ற துருப்புக்கள் கடற்கரையோரமாகப் போராடிக்கொண்டே பின்னடைந்து போய் மதகுகளைத் திறந்து விட்டனர். நாடுமுழுவதும் வெள்ளப் பெருக்கெடுத்தது. காலம் கடத்தும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிடில் கால்வாய் துறைமுகங்களை ஜெர்மனியர்கள் கைப்பற்றி விட்டிருப்பர்.

1915-ம் வருடத்தில் யுத்தத்துக்கு முற்றுப் புள்ளிவைத்த சர்ச்சிலின் அடுத்த திட்டம் டார்டனல்ஸை நிர்ப்பந்தப்படுத்தி, மத்திய கூட்டணியிலிருந்து துருக்கியைத் தனியாகப் பிரித்து, பால்கன் நாடுகளின் சிநேகத்தைச் சம்பாதித்து, கீழ்த் திசையில் ரஷ்யர்களின் பெருவெற்றிக்கு வழிகோலுவதாக விருந்தது. சீக்கிரம் யுத்தத்தை முடிவுறச் செய்து, எதிரியைப் "பின்புற"மாகத் தாக்குவதற்கான அந்த திட்டத்திற்கு எதிரான எல்லா ஆக்ஷேபங்களையும் அவர் அசட்டை செய்தார்.

வெகு சீக்கிரம் ஆபத்து ஏற்பட்டது. ஜலசந்தியில் பிரவே சித்த தாக்குதல் கோஷ்டி குண்டு மருந்து வைக்கப்பட்டிருந்த பகுதியில் மோதியதால் மூன்று போர்க் கப்பல்கள் நாசமடைந்தன. இதனுல் தளபதி நடவடிக்கையை ரத்துச் செய்தார். லண்டனிலே, கப்பற்படை யுத்த கோஷ்டியை அழைத்து, நடவடிக்கையை மீண்டும் துவங்குமாறு அட்மிரலுக்குக் கட்டளை யிடும் தந்தி யைக் காட்டினர். ஆனல், அந்த தந்தி அனுப்பப்பட வில்லை. ஸ்தல தளபதிக்கு விரோதமாக நடவடிக்கை எடுப்பதற்கு கப்பற் படை இலாகா அதிபர்கள் மறுத்து விட்டனர். இச்செயல் பரிதாப கரமானது என்பது இப்போது தெளிவாகிறது. ஏனெனில், துருக்கி பீரங்கி வீரர்களின் கை அப்போது ஒடுங்கி யிருந்தது. ஸ்தலத்தில் பிரசன்னமாகி யிருந்த ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும்கூட மேற் கொண்டு நடவடிக்கை எடுப்பது வெற்றியளிக்காது என நம்பிக் கொண்டிருந்தனர். "அச்சமயத்தில் கொடுக்கப்பட்ட உத்தரவுகள்

நிறவேற்றப்பட்டிருந்தால், யுத்தத்தின்போக்கு மாறி, ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் தன்னந்தனியே தொடர்ந்து போர்நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும்" என டார்டனல்ஸிலுள்ள திறமை மிக்க ஜெர்மன் ஜெனரல் லிமன்வான் ஸாண்டர்ஸ் எழுதினர்.

மேற்கொண்டு தாக்குதல் தாமதிக்கப்பட்டது. இதனுல் எதிரி தனது பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்வதற்கு அவகாசம் கிடைத்தது. பின்னர் நடந்த சம்பவங்கள் யுத்த சரித்திரத்திலே மிகவும் அகோரமானவையாக அமைந்தன. பிரிட்டிஷ்ஷாரின் தரப்பில் உயிரிழந்தோர் அல்லது காயமுற்றோரின் மொத்த எண்ணிக்கை இரண்டு லட்சத்து ஐயாயிரம். ராணுவத்திலும் கப்பற் படையிலும் எஞ்சியிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டபோது பொது மக்களிடையே ஆத்திரம் அதிகரித்தது. இதன் விளைவாக, சர்ச்சில் சீக்கிரம் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இத்தோல்வி பல வருடங்கள்வரை அவரை அலைக்கழித்து வந்தது; தேசமக்களின் நிந்தனைக்கு அவர் ஆளானர். அவரது விலை மதிக்கமுடியாத சேவையும் இதனுல் பிரிட்டனுக்கு கிடைக்கமுடியாமற் போயிற்று. வேறு எந்த மனிதராவது இவ்வாறு நிந்தனைக்கும் குற்றச்சாட்டுக்கும் இலக்காகி இருந்திருந்தால் அவர் தலை தூக்கியிருக்கவே முடியாது.

அச்சமயத்தில், கப்பற்படை காரியாலயத்துக்கு விஜயம் செய்த பார்வையாளரொருவர், சர்ச்சில் தமது மேஜையில் மனம் உடைந்தவராக உட்கார்ந்திருப்பதைக் கண்டார். சுவற்றின் மீதிருந்த படத்தைச் சுட்டிக்காட்டி, "இதற்காகவே நான் உயிர் வாழ்கிறேன். யுத்த துவர்க்கம், ஜெர்மனியரின் தோல்விபோன்ற நான் கவலைப்பட்ட எல்லா விஷயங்களும் தீர்ந்துவிட்டன" என வீழ்ச்சியுற்ற வீரர் கூறினராம்.

போர் முனையில் தமக்குப் படைத் தலைமை அளிக்குமாறு சர்ச்சில் கோரினர். அவருக்கு ஒரு பிரிகேட் அளிப்பதற்கு சர்ஜான் பிளர்சு முன் வந்தார். இதற்குப் பிரதமர் ஆஸ்க்வித்திடமிருந்து கிடைத்த பதில் இதுதான்: "கடவுளுக்காக அவருக்கு ஒரு பிரிகேட் அளிக்காதீர்கள். ஒரு பட்டாளத்துக்கு அதிகமாக எதுவும் அவரிடம் அளிக்க வேண்டாம்." ஒரு பிரிகேடையும் பெர்லினை நோக்கி சர்ச்சில் அழைத்துச் சென்று விடுவார் என ஆஸ்க்வித் அஞ்சியதாக நண்பரொருவர் நவின்றூர். இறுதியில் சர்ச்சிலுக்கு கர்னல் அந்தஸ்து தான் கிடைத்தது.

18705

(தொடரும்.)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# அஹ்காமுல் முஸ்லிமீன் ஹனபி

கலிமாக்கள், ஈமான், இஸ்லாம், உளூ, முழுக்கு, ஹைளு, நிபாஸு, தண்ணீர், தயம்மம், நஜீஸு, தொழுகைகளின் வக்துகள், தொழுகைகளின் வரிசைகள், தொழுகையை விட்டவனுடைய வேதனை, தொழுகையின் பறுளுகள், தொழுகிற ஒழுங்கு, ஜமாஅத்துடன் தொழுகிற வரிசைகள், வித்று தொழுகை, நபில் தொழுகை, தருவீஹ் உடைய வரிசைகள், ஜும்ஆ உடைய வரிசைகள், மையித்துடைய விஷயங்கள், ஸகாத்தின் பயான், நோன்புடைய வரிசைகள், ஹஜ்ஜுடைய வரிசைகள், நபி நாயகம் (ஸல்) அவர்களின் ரவுலா ஷரீபை ஸியாரத்து செய்கிறது ஆகிய இந்த விஷயங்களை பற்றி பேசும் பாடங்கள் இதில் நிறைந்திருக்கின்றன.

இவைகள் அல்லாமல் இன்னும் எண்ணற்ற விஷயங்கள் இந்த புஸ்தகத்தின் தக்மிலா என்று சொல்லப்படும் பாகத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அரபி வார்த்தைகள் அரபியில் போடப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ. 1—0—0

ஷை அறபுத் தமிழ் போட்டோ அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 1—8—0

ஷை தமிழ் ஷாபி மதுஹபுக்குரியது அறபி வார்த்தைகள் அறபியிலும் சேர்க்கப்பட்டது விலை ரூ. 1—0—0

ஷை அறபுத் தமிழ் போட்டோ அச்சு ஷாபி மதுஹபுக் குரியது கலிகோ பைண்டு விலை ரூ. 1—8—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# பத்ஹுர் ரஹ்மான் பில்பிக்ஹின் னுஃமான்

## (ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகையுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல்செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லி முடையவும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இருலோகத்தில் பிரயோஜனம் தரவல்லது.

இந்த நூலில் ஒவ்வொரு முஸ்லீமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன.

உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கமும், ஸுன்னத்தின் சிறப்பு, [illegible] ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகல விதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்தத் தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும்.

இதன் விலை ரூ. 3

ஷெ அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி-பி-பிக்ஹே நிஃமானி.

விலை ரூ. 5

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.